சதாபரிகாசம்! சதாசந்தோஷம்!!

உ

விகடவிநாயகர் துணை.

தெள்ளிய சிங்கம்

# மஹா பூலோக விகடன்

என்னும்,

# கலியுக விகடன்.

இஃது,

பாலகவிராஜர்

பெ. பாலராஜம்பிள்ளை

அவர்களா லியற்றப்பட்டு.

முதல் பதிப்பு.



ம-ா-ா-ஸ்ரீ. கருங்குழி:

நாதமுனிநாயுடு அவர்கள் நன்முயற்சியிற்

சென்னை-சூளை,

பெ. வடிவேலன் அண்டு பிரதர்ஸ்

அவர்களால்.

சென்னை-சூளை,

தொண்ட மண்டலம் பிரஸில்

பதிப்பிடப்பெற்றது.

1906.

இதன்விலை] ரிஜிஸ்டர் காபிரைட். [அணா-3.

O-9M83, KV
N06

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவருக்கும், இதரமான பலவித புத்தக வியாபாரிகட்கும் தெரிவிப்பதியாதெனில்,—

(தெள்ளியசிங்கம் மஹாபூலோக விகடனென்னும் கலியுகவிகடன்) என்கிற இப்புத்தகத்தை 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின்படி கெவரன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதினால் இதை என்னுடைய உத்திரவில்லாமல் யாவரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிடுவோராகில் அதனாலுண்டாகும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட் சட்டத்தின் கேள்விக்கும் ஜவாப்புதாரிகளாவார்களென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது.

# விளம்பரம்.

இப்புத்தகமாவது, இன்னும் பலவிதமான புத்தகங்களாவது, ஜர்மன்சில்வர் சாமான்கள், கெடியாரதினுசுகள், ரப்பர் சீல்கள், பலவிதமான சீமை சாமான்கள் எது தேவையானபோதிலும் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

எமது புதிய கேட்லாக் புத்தகம் தேவையானவர்கள் தமது (போஸ்டாபீஸ் உள்பட) மேல்விலாசத்தை தெளிவாக யெழுதுவதுடன் அரையணாலேபில் அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பெ. வடிவேலன் அண்டு பிரதர்ஸ்,

சர்வ ஜனானுகூலன் புக்டிபோ,

நெ. 34, அவதானம் பாப்பையர் தெருவு,

ஜார்ஜ்டவுன் போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ தெள்ளியசிங்கம் மஹா பூலோகவிகடன்

(என்னும்,)




PRINTED AT THE THONDAIMANDALAM PRESS, CHULAI, MADRAS.

FIRST EDITION, Copies 500,—2:-7-06.

# முகவுரை.

அன்பார்ந்த நண்பர்களே!

ஏழுகடல்சூழ்ந்த யிவ்வுலகினுள்கண் வித்தியா சதுரர்களால் அனேகம் இவைகளைப்போல விகடகதா புஸ்தகத்தை வெளியிட்டிருக்க, சிற்றறிவுடைய வடிவேலனும் ஆண்பாலர், பெண்பாலர்கள் செய்யத்தகாத செய்கையிலுமன்றவரும் துர்க்குணத்தைவிடுத்து (கிடைப்புண்ணுக்கு சிகமோகண்ணாடி என்பதுபோல) நிலைக்கண்ணாடிபோல் ஐக்கபடத்துடன் நேரில்துலங்கும் "இப்புத்தகத்தை" வாசித்து நற்குணத்திற் றுய்யநிலேதேடும் தன்மையாகவே;

மஹா பூலோக விகடனென்னும் திருநாமம்புனைந்த கலியுகவிகடன் தர்ப்பார் முதல் மானிடஜனனத்தில் "அச்செல்லாமொன்றே அதிலேயிருவகையா" என்று அருணகிரிநாதர் சொல்லியதுபோல், இருவகுப்பினராகிய ஆண்பால் பெண்பாலர் அகிலத்தில் சகிக்காத செய்கையுள்ள பிரசங்கமாகிய உண்டவீட்டில் ரெண்டகஞ்செய்து திண்டாட்டப்பட்டவன்கதை. கணவனைவிட்டு தனை ஈர்த்தவனை நாடர்த்த தோகையாள்கதை, வேசியர்க்கு திரவியமிறைத்து மோசம்போன விழலாண்டிகதை, உண்டசோத்துக்கு குண்டாங்காணம்போட்டு கலகஞ்செய்த குண்டுவீராதன்கதை, கடல்ஜலத்தை ஓட்டாலிறைப்பேனென்னும் உத்தமிகதை, மாமன்மாமிநாத்தி மதனிவர்களை துன்பப்படுத்தியசம்சாரிகதை, இல்லையிலுறசி மண்ணைப்பிடுங்கும் மன்னுராசாமிகதை யாவும் விகடவசனத்துடன் சிறுசிறுகதைகளில் டார்சி, ஜாவளி, கும்மி, சிந்து, கலி, விருத்தம், விடைகளோடு வெண்மொழிகளமைத்து சந்தேக சமாதானத்தின்பேரிற் கட்டிக் காட்டப்பட்டிருப்பதால் இதை வாசிக்கு மித்தேய மன்னர்கள், மங்கைகள் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்பவைகளை யுணர்ந்து சீலத்தொழுகிச் சிறைமையொனக் கோருகின்றவென் எண்ணத்தைப் பூர்த்திசெய்விக்கு மதி யென்மை தந்தி தென வெளியிடலாகினேன் இதிலேதாயினுந் திருத்தத்தக்க பாகத்தைக் கண்ணுறுங் கனவான்க ளடியேனுக் கன்புகூர்ந்தறிவிக்கி னவ்வாறே இரண்டாம்பதிப்பிற் றிருத்திக்காட்ட சித்தமாயிருப்பதோடு இதிலேசாகினுஞ் சொற்பிழைகளிருக்கின் வாசிக்கு மல்லது கேட்குமறிவுடையோ ரெளியனென் சிற்றறிவிற் புலப்பட்டவா றியற்றியதை ஒருவாறிகழாமற் றிருத்தி யிச்சிறுவனைத் திகழடையச் செய்வார்கள் சிறப்புள சான்றோரென வவர்கள் மேலானகளத்தை பிரார்த்திக்கின்றனன்.

பெ. பாலராஜம்;

பாலகவி.



| கஜமுகன்—வினு. | கலியுகவிகடன்—விடை. |
| --- | --- |
| ஆரப்பா நீ, | உங்களப்பன் நான் தெரியாதோ. |
| நீ! எப்படி எங்களப்பனுவாய், | வித்தியாசமுள்ள (கலி யுகம் யிவ்வுலகில் கடனை தீர்க்கவந்த யப்பன். |
| கடனென்று லென்ன, | தேவர்கடன், பிரர்கடன், முனிவர் கடன் ஆக(மூன்று) |
| மூன்றுகடனும் எவ்விதமொழியும், | தேவர்கடன் - உஙகளன்பொழுகசெய்து; பிரர்கடன் 84,லட்ச ஜீவர்களையும், முனிவர்கடன் - ஞானிகளாகி உஙகளடிடணியச்செய்தால் தீரும். |
| ஆனாலுனக் கென்னவரந்தரவேண்டும் சொலவாய் அப்பா, | இதோ நான்தரும் ஆராதனையைப் பெற்றவரும் பழிக்காதாருள செய்வீர். |
| உன்னிஷ்டம்போலாகும், | சர்வம் விகடம் ஜெகத். (வந்தனம்.) |
| கனம்பெருவாய், | மனம்வைப்பாய. (சந்தனம்.) |

சதா பரிகாசம்! சதா சந்தோஷம்!!

உ

விகட விநாயகர் துணை.

லஸூடே கலாடாநமஃ

சர்வம் விகடமயம்.

தேஜஸ்விபசிங்கம்

## மஹா பூலோக விகடன்

என்னும்,

# கலியுக விகடன்.

### விகட தேவர்கள் துதி.

தேவாரம்.

அப்பனே *ஒடிந்தபல்லா ¶அரைடஜன் தலையா பெரிய
‡பப்பரவாயா வென்றும் பகருமீ ||ரிரண்டுநாக்கா
§கப்பரைமூஞ்சி 0ஜல்லிக் கண்ணுக ?ருங்காலா மும்
மப்பணுபுரைக் குங்காதை யழிந்திடா தருள்செய்வீரே.

ஆ! ஹா!! சப்பாணீ அப்பாவீ எப்போவீ இப்படி ஒப்பிட முப்பது மண்டியிட்ட குண்டாங்கர்னம் கொண்டாட்ட திண்டாட்டம் உண்டாகுமோ ஜண்டாக் கொடிபரக்க யிடம் உண்டோ" தம்பி, டெலிகிராம் கம்பி, டிராம்கார் வம்பு, சோடாவாட்டர் பம்பு, செகப்புதலை கெம்பு, பஞ்சாலை சாப்டிங், மதுரைவீரன் மீட்டிங், மொடாவாடர் ஜண்டிங், இருட்டுசாமி, குருட்டுசாமி, திருட்டுசாமி, கருங்கல்சாமி, வரட்டுசாமி, முரட்டுசாமி, காஞ்சா சாமி, மாஞ்சா சாமி, மடிபிடித் திழுக்கும்சாமி, அடிப்பங்

---

*ஒடிந்தபல்லா - ஒத்தைக்கொம்பனே சந்திரமுகன்)
¶அரைடஜன்தலையா - ஆறுமுகக்கடவுளே
‡பப்பரவாயா - நரசிம்மனே
||ஈரிரண்டுநாக்கா - நாலுநாக்கா (நான்முகக்கடவுள்)
§கப்பரைமூஞ்சி - திருவோடேயேந்திய (பரமசிவன்)
0ஜல்லிக்கண்ணு - ஆயிரங்கண்ணு (இந்திரன்)
?கருங்காலன் - எமன்

கரைசாமி, கள்ளிச்சாமி, கொள்ளிச்சாமி, தண்டுசாமி, மொண்டிச்சாமி; அல்லாசாமி, எல்லாசாமிகளும் "புள்ளிமானைப்போல துள்ளித் திரிவதைபோட்டு விளையாட்டாக கிளைக்கதையாய் பிளப்பதை" ஒழிமருத்து பழித்திடாதபடி மேல்வாயாலும் கீழ்வாயாலும் சிரித்து பல்லுழுதிராமல் நாக்கும் சுளுக்காமல் மதியுல்லாசம்போலும் ரதிகேளிக்கைபோலும் பதியோரஞ்சித்திட அருள் விழாகில் பருந்துக்கு விருட்டதுபோல் என்ருருண்டை யுறிந்து வள்ளிக்கிழங்கை ஒளித்து வெருங்கையால் ஆராதனை செய்து விகடதேவர் பெருந்தொப்பைகள் நிறைந்ததும்குறைந்ததுமாக புசித்து பூர்ணகடாக்ஷம் என்பது எண்ணமோ திண்ணமே வண்ணமாயன்பனுக்கு எழுதிய நட்பேட் நிருபம்.

அப்படிக்கும் இப்படிக்கும் இல்லாத
குடாகண்டன்
மஹா பூலோகவிகடன் (என்னும்)
கலியுகவிகடன்.

இதைப் பாராமல் பதிலெழுதி கடலில் போட்டுவிட்டு ஜட்டு பட்டென மறுவேலைகளை பாராதிருக்க அனேக வந்தனம் தந்தனம். பராபவவருஷம், சராசரிமாதம், கராகண்டதேதி.

சர்வம் விகடமயம்.

# கதா ஆரம்பம்.

தேசம் — இண்டாட்டநகரம்.
கதாநாயகன், — கலியுகவிகடன்.
மந்திரிகள், — மலையாண்டி. (பிரதானி)
சேவகர்கள், — சூரசேனர்கள்,
(மூட்டைப்பூச்சி, கொசவு, எறும்பு.)
புரவி, — பூர்வக்கியானி பூனை)

சீன் 1-வது;—தர்ப்பார்.

## கலியுகவிகடன் தர்ப்பார்.

விகடவாழி விருத்தம்-இராகம்-காம்போதி.

வெந்தணைதனின் முனிட்டு வெருவாய்பிளந்துநிதம்
வந்தனைதபேசமிந்த வைபோககரம்வாழ்க
சந்ததிபெருத்துத்தூற சகத்துள்ளும்மாரியாட
பிந்திதை செங்கோலிசைய பெருங்கடவாடைவாழி.

வசனம்.—மந்திரீ! நமது தேசமே தேசம் நம் சிம்மாசனத்தின் தேசமே தேசம் நமது சபையின் வாசமே வாசம நல்லிருட் பிரகாசமே காசம் வெரிகுட், வெரிகுட்.

வசனம்.—பிரபுவே! தாங்கள் இச்சிம்மாசனமமர்ந்தவுடனே ஜொலிஜொலிப்பு மினிர் மினிரை கொடிமின்னல்போல் ஒளிக்கும் வாடிய முகமும் கூடிய கையும் ஓடியகாலும் தேடி ஆயர்ந்தேதே வெருணைகள், வெருணைகள்.

வசனம்.—மந்திரீ! கடைசைடை செருப்பாலெரிந்தது கிருஷ்ணையல் பாம்படித்த பாருவக்கிலேப்போட்டுமை குங்கிலியம்கொட்டி அகிலாத்துவிட என் மேனி குளிச்சரம்வருவதாக வதந்தி கொடுக்கவே இச்சிம்மாசனம் அமர்ந்தேன் சந்தோஷம். முன்னம் நான் கேழ்க்க நீ பார்த்த சிறுவிஷ்ணு சிறுபிள்ளைப்பாம்.

வசனம்.—மஹாராஜ்! பாருங்கள் தாம்சொல்லவும் நான் கேழ்க்கவும் வழி நோக்குகின்றேன் துரையே.

## கலியுகவிகடன் தேசவிசாரணை.

இராகம்-காம்போதி ரூபகம்-தாளம்

கலியுகவிகடன்.

அந்தணர்வேதம் செல்லெறித்திட
அவரவர்கள் யுரங்குகின்றாரா,

மலையாண்டியாகிய மந்திரிகள்.

ஷெ இராகம்.

செல்லெறித்தவே தத்தையிழந்து
திண்ணைமூலையி லுரங்குறாரே.

கலி. சாதிமுறையை தவிர்த்துதொழிலில்
சரியற்றிருக் கின்றார்களா,

மலை. முறமைதவர்ந்து முனிவர்களை
முனிந்து தூங்கிக் கின்றார்களே.

கலி. குருக்கிட்டபடியை தூவியளப்போர்
கீர்த்திபுகழ் பரக்கின்றதா,

மலை. படியைகுறைக்கும் பரமபுருஷரின்
புகழ்பெரும் பரக்கின்றதே.

கலி நேசர்வஞ்சனை பினைக்கும்லோபிகள்
நிலையற்று வாழ்கின்றாரா,

மலை. வஞ்சனைசெய்வோ ரிவ்வுலகில்
வாழ்வற்றுழல் கின்றனரே.

கலி. பூனைபோர்செய் திடபுலிகள்
பதுங்கியிருந்து வசிக்கின்றதோ,

மலை. எலிக்குசிங்கம் பானிரங்கி
ஏவல்பணிசெய் திருக்கின்றதே.

வசனம்.—மந்திரி! நல்லது, ஓர் சந்தேகம்,

வசனம்.—பிரபு! தங்களுக்கு என்ன சந்தேகமோ.

இராகம் பார்சி-ஆதி-தாளம்.

(வந்தனம் தந்தோம் மஹாராணி என்ற வர்ணமெட்டு.

கலியுகவிகடன்.

எந்தனருமை மந்திரிகளே

மந்திரி.

யாது ஓதும் என்னரசே

கலியுகவிகடன்.

சாதுகளனைவரும் வந்தனரோ

மந்திரி.

சபைநிறைய சூழ்ந்துமே

சுருள்பதம் அருள்கின்றார்.

வசனம்.—மந்திரீ! 1கொம்பேரிமூக்கன், ஒருடஜன்கையன், ஜிலேப்பிதலையன், மத்தடிசித்தன், புல்புல்வாயன், ஏணிக்காலன், எருமீசைமூஞ்சி, என்னும் சாதுக்களாகிய சப்த அசாமிகளும் *நித்ரானந்த சுகபோக நிர்வாகசபைக்கு ஆனந்தகோலமாய் சூழ்ந்திருக்கின்றார்களா,

வசனம்.—மாருத! இவர்கள் லேடிஸ்களாகிய 0முகந்திருப்பி, கழுத்துசுருக்கி, வேடச்சி, குறத்தி, மலைநீலி, அரைகழுத்தி, குப்பைலட்சி, எழுந்திராதேவி, தட்டுவாணி, ஏந்த்ராணி, இந்த சுந்தரிகள் வருஷம் தவிரினும் நாள் தவராமல் ஓட்டுமாளிபின்மேல் வந்திருக்கின்றார் அதோ இதோ பார்.

வசனம்.—தந்திரீ! ஆ ஆ சபாஷ் இவர்களை பார்க்கத்தேடினும்,

இந்திரனைசந்திரனை இதழாலேமறைப்பாள்

எமதருமராஜனை கைலேயாலேமறைப்பாள்.

என்பதுபோல், யாவர்கண்ணுக்கு மெட்டாத †மாயாசுந்தரிகள் அகப்படுவதே ஆச்சரியம் அப்படி தப்பித்தவரி அகப்பட்டுக்கொண்டாலும் கண்ணைமூடி காதினல் பார்த்து அவாள் அணி, ஆடை, அழகும் நாம்சொல்லத்தரமா ஆகிலும் சொல்லித்தான் போடவேண்டுமென கழுத்தறியும் புராணத்திற் சொல்லுவதாக கூழுக்குக் குறள்பாடும் கிழவி கூறுகின்றான்.

---

1. கொம்பேரிமூக்கன்-ஆனைமுகன்
2. டஜன்கையன்-பன்னிருகைவேலன்
3. ஜிலேப்பிதலையன்-சடைதரித்தசிவன்
4. மத்தடிசித்தன்-மத்தடியுண்டமாயன்
5. புல்புல்வாயன்-பிர்ம்மதேவன்
6. ஏணிக்காலன்-இந்திரன்
7. எருமீசைமூஞ்சி-காலன்

* நித்திரை, ஆனந்தம், சுகம் போகம், இவையாவும் கொடுக்கத்தக்க நிர்வாகசபை-நிலையில்லாதசபை.

0. முகந்திருப்பி-சித்தி
2. கழுத்துமுருக்கி-முத்தி
3. வேடச்சி-வள்ளி
4. குறத்தி-தெய்வானை
5 மலைநீலி-பர்வதராஜன்புத்திரி
6. அரைகழுத்தி-கங்கை
7. குப்பைலட்சி-மூதேவி
8. எழுந்திராதேவி பூமிதேவி
9. தட்டுவாணி-கமலவாணி
10. ஏந்திராணி-இந்திராணி

†மாயாசுந்தரி-கண்ணிற்கெட்டாதவர்

வசனம்.—பிரபுஜீ! தமது சப்பையவாயைப்பிளந் தூதிரும்பிவார்த்தைக்கு காட்டிடும் சாப்புமணிகளுண்டோ இல்லை தெரிவிப்பீர்.

## கலியுகவிகடன் லாவணி.

இராகம்-மோஹனம் அடதாளம்.

உத்தேசவயதோ எண்ணிடலாகா
உடம்பெல்லாம்வீசுங் கமகமவாசம்
எத்திசையாள்வோர்க்கு மிவர்போல்கிட்டாது
என்னமோநாம்செய்த பாக்யமேகிலாக்கியம் (உத்)

அணிந்திடும்முடைகளோ அரிசிகட்டுஞ்சோணி
ஆபரணஙகளோ அபிரேக்காணுண்டு
மணியரைவீடுகளோ மஹாசமுத்திரத்தின்
மத்தியில்வாழ்ந்திடும் மங்கையிவராகும் (உத்)

மெத்தபினுக்கிடும் மாதர்காத்தில்
மகிழிருபத்தரை மாத்துள்ள தங்கம்
சொத்தைபுளிகொண் டெத்தனைதுலக்கியும்
பித்தளைநாத்தமது போகாதிவர்க்கு (உத்)

வசனம்.—மந்த்ரி! இப்பேர்வகித்த ஆடையணிந்து ஆபரணம்பூட்டி, கஸ்தூரி மஞ்சலெண்ணை தீட்டி. கோதிமயிர் கோடுபின்னல் கூட்டி, மல்லியிலுயர்ந்த கொத்தமல்லிசூட்டி கலீர் கல்!.கலீர் கலீ! யென்கிற அசைநடைகாட்டி, தருந்த அசாமிகளை ஆறுமாதத்திற்கொருமுறை அந்தர லாக்காஸ்பத்திரிக்கு அனுப்பும் குங்கிலியநாயகி யென்னும் தோழியோடு அலங்கார நிர்வாக சபைக்கு பிரார்த்தனையானது மஹா சந்தோஷம் ஆ ஆ ஆ வென (வாயைத்திறவாமல் சிரித்தல்.)

வசனம்.—மாருத்! ஆயிரந்தலையும் இரண்டாயிரம் நாவைப்படைத்த விசாகன் (சேடன்) இவர்களைபார்த்து சிரித்தால் ஆயிரந்தலை இரண்டாயிரந் தலையாகவும் இரண்டாயிரம் நாக்கு நாலாயிரம் நாக்காகுமே அதுபோல் நான் அசப்பில் சிரிக்கவேணுமென்றால் பூனைவால், நாய்வால். எலிவால், கோழிவால், ஆட்டுவால், பல்லிவால், அந்தவால், இந்தவால் ஆக முப்பத்திரண்டுவால் ஒன்றாக முடித்து கட்டியிழுக்க ஏருப்பாகிய பாரிமனுஷன் வேண்டும் இந்தவூரில் தற்சமயம் யாராகிலும் இருக்கின்றனரோ ஆம் ஓம் பிம்பிம் பொம்மக்கா திம்மக்கா ஜெகத்.

வசனம்.—மந்திரி! நல்லது நான் லோகபாகங்களை காண யுத்தேசங் கொண்டிருக்கிறேன் நீ ஜாக்கிரதையாகயிருந்து பாக்கியம்பெற்று சௌக்கியமடைவாய் வருகின்றேன்.

வசனம்.—தேவ தேவா! தம்து உத்திரவின் சித்தம்.

(சபை கலைதல்.)

---

கலியுகவிகடன் இராஜஜியத்தைவிட்டு செல்கிறமார்க்கத்தில் விகடலேடீஸ்கள் ஓட்டம் பெருனடையாய் ஓடிவந்து ஞானக்கும்மிப் பாடும்படி கேட்கவே ஆனந்தம்பெருகி பாடுதல்.

சீன் 2-வது;—வீதி.

ஓம் விகட சரஸ்வதி சலாம்.

இராகம்-பைரவி) விகடஞானக் கும்மி. (ரூபகம்-தாளம.

இந்தியன்லேடி காலேஜிபெண்களே எல்லோருங்கூடி யொன்ருகவாரீர், சுந்திரசந்திர சூரியன்புகழ செல்வவிகடக் கரிவாழி.

சைஞைசகுந்தலா பூஜூலூர்வசி சரசமோஹன கனகவல்லி, மைனீட்டிகண்ணுக்கு பொட்டுமினுக்கிடும் மைமசுந்தரிகாளோடிவாரீர்.

கற்குலசேகரி நாடகசிங்காரி நாட்டிலுலாவும் மாரிகளே, உற்றதையான்சொல்ல வூரிலுள்ளோர்மனம் ஒங்கியேபற்றியெறியாமல்.

சாமியைபழிக்குமாமிகளேயந்த சித்தஜன்மேல்சுமைபோடாதீர் பூமியிலுள்ளதை சொல்லலாமோவென்று பொக்கவாயிலிடிக்காதீர்.

சத்துருனிஷ்டூர தோழர்களேசலாம் சாற்றிமண்ணைக்காலால் தூவாதீர், தத்துவஞானத்தை விட்டுதிண்ணைமீது தூங்கிவிழுயுரங்கிடாதீர்.

என்றுமிவ்வைபோக முள்ளதெனயுளம் எண்ணிசதிமோசம் போகவேண்டாம், மன்றுளாடுஞ்சிவன் மாயையேநித்தம் மகிழ்ந்து கும்மி யடியுங்களே.

ஓம் விகடதிருச் சிற்றம்பலம்.

என பாடிபரவசத்துடன் ஜனத்தைவிட்டு வனத்தையணுகி நடக்கையில் பெண்டாட்டிக்குபயந்து தண்டகாரண்யமடைந்த போலிதுறவிகள் கலியுகவிகடனை வந்தனைவழிபாட்டுடன் அழைத்தல்.



சீன் 3-வது,—காடு.

போலிதுறவிகள்—வினா, கலியுகவிகடன்—விடை.

போலிதுறவி.—எது! எது!! இவ்வளவு தூரம் சாமி,

கலியுகவிகடன்.—கோவிலிலிருப்பது சாமி, நம்மை தரிப்பது பூமி, பெண்ணைக்கொடுத்தவன் மாமி, லீலைவிரும்புவன் காமி, தேடிய பொருளைசேமி, பல்காலிட்டவன் பழையாசாமி, பொருள் பெருத்தவன் பெரியாசாமி, என்னை யின்னானென்றுநீ நேமி.

போலிதுறவி.—ஐயா! நீர் யாரோ தெரியாது மன்னிக்கவும்,

கலியுகவிகடன்.—நான்பேசுவதை மன்னி, நீ பேசுவது பன்னி, கூந்தல்முடிப்பது பின்னி, உடலில்ஜனிப்பது ஜென்னி, தேகம் நடுங்குதல் குன்னி, மானங்குமுறுதல் மின்னி.

போலிதுறவி.—அதிகம்பேசினால் நம்மை திட்டுவீரோ,

கலியுகவிகடன்.—வம்பன்பேசுதல் திட்டு, வெற்றிலைவிளைவதுபட்டு, தாலிகட்டுதல் தொட்டு, இடிசுவர்தாங்குதல் முட்டு, மடையன் பேசுதல் ஓட்டு, கிழங்குதின்பது சுட்டு, காவில் அணிவது மெட்டு, நெத்தியிலிடுவது பொட்டு, இட்டிலிதின்பது புட்டு, பிள்ளைவிரும்புதல் லட்டு, கவிஞர்கள்சொல்வது கட்டு, நீர் வேண்டுவது துட்டு, நான் நடப்பதே நெட்டு.

போலிதுறவி.—கோபங்கொள்ளாதிர் துரையே,

கலியுகவிகடன்.—வண்ணான் தப்புவது துறை, உன் துணியிலிருப்பது கறை, தீவுக்களிடுவது திரை, இருட்டிருப்பது சிறை, மூன்றும்

சந்திரன் பிறை, வயலில் விரைப்பது விரை, பறையரடிப்பது பறை, நான்பேசுவது முறை.

போலிதுறவி.—உமது பெயர் யாதோ!

கலியுகவிகடன்.—பேர்பெற்றவன் பாண்டியன், பேர் இழந்தவன் நீ ஊர் நிசிந்தவன் நான், பார்சுமந்தவன் சேடன், தேர்ஊர்ந்தவன் தேவன், மார்முளைத்தது மாதுக்கு, சர்வளர்ந்தது பேனுக்கு, வேர்தழைத்தது மரத்திற்கு, என்பெயர் உலுத்தம்பயர், நெல்லுப்பயர், கொள்ளுப்பயர் (அல்ல) சொல்லுகின்றேன் கேளுங்கள் கார்கொண்டசிங்கம், கர்ணவதார கனசிங்கம், பேர்கொண்டசிங்கம், புனிதர்வயற்றில் தரித்தசிங்கம், பார்புகழும் சிங்கம், பெரியோரவணங்க பிறந்தசிங்கம், சீர்கொண்டசிங்கம், சிறந்தவிடத்தில் சென்றசிங்கம் தோளுதசிங்கம், நானல்லோ கலியுக விகடசிங்கம்.

போலிதுறவி.—தெரியாமல் கேட்டுவிட்டோம் வம்பு தும்பும் பேசாதீர் நமோ நமஸ்து,

கலியுகவிகடன்.—பார்பேசுவது வம்பு, எருதுகட்டுவது தும்பு, நீர் பேசுவது வீம்பு, கன்னுணடிப்பது இரும்பு பித்தளை செம்பு, கொல்லையில் விளைவது கம்பு, வெகுளிதொடுப்பது அம்பு, தண்ணீர்மொள்வது தாம்பு, கல்லிற்சிவந்தது கெம்பு, பல்லைஇளிப்பது கெம்பு, குழந்தைகள் விரும்புவது கரும்பு, விஷத்தை தருவது பாம்பு, பெண்கள்நோற்பது நோன்பு, நான்சொல்வதை நீர் நம்பு.

போலிதுறவி.—நல்லது உமது ஊர் எது!

கலியுகவிகடன்.—நோக்காடு, சாக்காடு, முதுகாடு, வேக்காடு.

போலிதுறவி.—இந்தவூர் பூவுலகிலுண்டா அல்லது, சொல் தொடர்ச்சிக்காக சொல்கிறீரா!

கலியுகவிகடன்.—சொல்தொடர்ச்சியல்ல, (வித்வான் சர்வத்ரபூஜித்) என்று முன்னோருரைத்து கறைத்து குடித்திருக்கின்றனர்கள் ஆகலின் கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பே நிற்க, நான்சொன்னவூர்கள் நாமிருக்கிற விடத்திலேயே இருக்கிறது எப்படியெனகேள், மனிதர்களுக்கு முடிவுநேரிடுங் காலத்தில் முன்னே நோக்காடுநேரும் அதாவது நோய்வரும், பின்பு சாக்காடு அதாவது சாவுநேரிடும், அதன்பின் முதுகாடு அதாவது

சுடுகாட்டிற்கு கொண்டுபோவார்கள், பின்பு வேக்காடு அதாவது கட்டையில் வேகவேண்டுவதுதான் (சூளே.) மதராஸ் ஊர்.

போலிதுறவிகள்.—சந்தோஷம் ஒரு திவ்யகதை சொல்லி ஆசீர்வாதம் தரவேண்டும்!

கலியுகவிகடன்.—மனைவிசொல் தடுத்து செய்துகெட்டது வாதம், இதற்கு சிலவிட்டோர் அன்னிதம், தோலைவளர்ப்பது சாதம், நம்மை நடத்துவதுபாதம், மரத்தடியில் படிப்பது வேதம், மல்லார்ந்துபார்த்தால் பிரேதம்.

போலிதுறவிகள்.—பலே பலே சபாஷ், வெட்டினகடக்கால் எங்களை சார்ந்ததே ஏனென்றால் உத்தம மனைவிசொல்மீறி சிலகாஞ்சா சாமிகள் சொற்கேட்டு முன்னம் சம்பாரித்த பொருளை யெல்லாம் வாதம் செய்வதில் தோர்த்து போனபொருளை தேட வகையற்று பெண்டாட்டிக்குப் பயந்து தண்டாகாரண்யமென்னும் இந்த வனமனுஷி வசிக்கையில் தங்களைக் கண்டோம் குருவாகக்கொண்டோம் எங்களுக்கு புத்திதரும்படி கதைசொல்வீரென விண்டோம் இனி ஒருக்காலும் செய்யோம் நமஸ்து.

கலியுகவிகடன்.—பூலோகதூக்கத்தை சொல்லுகின்றேன் கேளுங்கள் போலிதுறவிகளே கேளுங்கள்.

போலிதுறவிகள்.—நன்று நன்றே கேழ்ப்பது நன்றே.

---

## சீன் 4-வது,—அகந்தபுரி கதை.

இந்த ஐம்பத்தாருதேசத்தில் ஒன்றாகியது ஐம்பத்தேழாந்தேசமாகிய அகந்தபுரி யென்கிற வூரில் ஜெகந்நாதன் என்னும் ஓர் வர்த்தகனிருந்தான் அவன்மனைவி சுகந்தமல்லிக்கு அனேக காலமாய் குழந்தையில்லாம லிருக்கவே * சாலேஸ்வர நாதரை சதா தொழுதவண்ணமாய் வர்த்தகத்தில் மோசஞ்செய்து தேடிய பொருளையெல்லாம் கோதானம், பூதானம் கொடுத்தும் கொடாததுமாய் சந்தேகத்தி லிருக்கையில் ஓர்நாள் லட்சவராகனுள்ள நவரத்தினத்தை எழுவராகனுக்குக் கொடுப்பதாக ஜெகந்நாதன் கினவுகண்டு கணக்கிடாதபடி பணத்தை மூட்டைகட்டிக்கொண்டு சுகந்தமல்லியிடம் விடைபெற்று ஆரண்ணியமார்க்கமாக வருகையில், சில கள்ளர்கள் அவ்வனத்தில் பத்துவயதுடைய ஒரு ஆண்குழந்தையைக் கொண்டு

* சாலேஸ்வரநாதர் - கண்ணில்லாதேவர்கள்.

வந்து அக்குழந்தை யணிந்திருந்த ஆபரணங்களையெல்லாம் கழட்டிக்கொண்டதுமன்றி உயிர்க்கொலைசெய்ய துணிந்தனர், அச்சமயம் குழந்தை கூக்குறலிட்டு அழவே ஜெகந்நாதன் சுற்றுமுற்றும் பார்த்து கள்ளரிருக்கு மிடத்திற்கு மனோவேகமாய் ஓடிவந்து பார்க்கவே தன் ஆசைக்குத்தக்க ஆண்குழந்தையா யிருக்க, நாம் வைத்திருப்பது ஏழுவராகன் தான் என்று நினைத்து கள்ளரிடத்தில் தன் கையிலிருந்த மூட்டையை கொடுத்து அக்குழந்தையை கேழ்க்க உடனே கள்ளர் மூட்டையைபிரித்துப்பார்க்க சவரன்களாயிருந்தது, இதைக்கண்ட ஜெகந்நாதன் நமது கெதி (நரிக்குப் பரிகொடுத்தாற் போலாச்சுதே) என்றலறி, கபீலென இடிவிழுந்த மரம்போற் சாய்ந்து பிரேதத்திற்குச்சமானமான மூர்ச்சையடைந்து (அழுவாரற்ற பிணமும் ஆற்றுவாரற்ற சுடலைபோல்) விழுந்துவிட, கள்ளர்கள் சந்தோஷித்து குழந்தையைவிட்டு சவரன்மூட்டையை எடுத்துக்கொண்டு சொந்தக்காரர்போல் எங்கள் பொருளை ஏன் யிதுவரையில் வைத்திருந்தாயென காலாலுதைத்துத்தள்ளி போய்விட்டனர்.

நிற்க, மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் பொருளைப்பார்க்க பக்கத்தில் பிள்ளையிருந்தது சரி நாம் விசனப்பட்டால் வருமோ நமது பொருளுக்கு சொந்தக்காரர் அவர்தான் என்று மனதை திடப்படுத்தி குழந்தையை கையில் பிடித்துக்கொண்டு வீடுசேர்ந்து சுகந்தமல்லியாகிய தன் மனைவியிடம் தான்பட்ட கெதியைசொல்லாமல் குழந்தையைக் காண்பிக்க அம்மாது (கொள்ளிவைக்கவந்த குள்ளநரியென்றறியாமல்) பிள்ளையாசை தீர்க்கவந்த வள்ளலே என்று சந்தோஷமடைந்து கங்கணசீலன் என்னும் நாமமிட்டு சீராட்டிப் பாராட்டி வந்தனள்.

இப்படி நிற்க, கங்கணசீலன் நல்லோருடன்கூடி வித்தை கற்காமல் சொக்காபிரதர்ஸ், உக்காபிரதர்ஸ், மக்காபிரதர்ஸ் இவர்களுடன் சேர்ந்து பிரதர்களே எனக்கு வித்தைகற்றுக் கொடுப்பீரென அற்புதத்தி பிரதர்கள் சில திரவியங்களை கொண்டுவரச்செய்து வயத்துப்பூஜைகளைபோட்டு வித்தையை ஆரம்பிக்கத் துடங்கினர்.

உலகநீதி] விகட பாலபோதம் [வர்ணமெட்டு.

ஆதியிலேழுக்குத்தூள் போடவேண்டும்
அதன்பின்புசிகரெட்டு பிடிக்கவேண்டும்
நீதியென்றகாஞ்சாடம் அடிக்கவேண்டும்
நிலைதவரகள்ளுசாறு குடிக்கவேண்டும்

பாதிவயதாகுமுன்னே பழுக்கவேண்டும்
பரத்தையரின்வீட்டுக்குள் நுழையவேண்டும்
ஆதிரவாய்ஆஸ்திபூஸ்தி வாங்கவேண்டும்
ஆஸ்பத்திரிபோய்சேர வேண்டுந்தானே.

என்ற விகட பாலபோதத்தை உபதேசித்து இதற்கு வியாக்கியானஞ் செய்வதுபோல் கங்கணசீலனென்னும் பிள்ளையாண்டானையும் மீதியாகயிருந்த பணத்தையும் கைப்பற்றி அழைத்துக்கொண்டு சின்னாண்டிமடம், (பீடிமடம்) பிள்ளையார் தோத்திரம் பிறகு, பெரியாண்டிமடம், (கஞ்சாமடம்) பொங்கலோ பொங்கல்மடம், (கள்ளுக்கடை) கைகாட்டிமடம் (சாராயக்கடை) இப்பெயர்பூண்ட மடாலயங்களெல்லாம் நுழைந்து பரீட்சைசெய்துவிட்டு மற்றபாடங்களை நாளயதினத்தில்சொல்லிவிடுகிறோம் வரும்பொழுது சகாயபுருஷனை மாத்திரம் கைத்துணையாகப் பிடித்துவருவீர் ஏனென்றால், "மணி மேக்ஸ் எனிதிங்ஸ்" என்பதுபோல், மணியிருந்தால்மாத்திரம் எல்லா காரியமும் சீக்கிரத்தில் அனுகூலமாக தடைகிடையாதென்று கங்கணசீலனை மரியாதையோடு அன்று வீட்டிற்கனுப்பினதும் வெளியிற்சென்று கஷ்டப்பட்டு வந்தவனைபோல அரண்மனைசேர்ந்து வளர்ப்புத் தாய் தந்தையரைக்கண்டுவணங்கி என்னை கள்ளரிடமிருந்து தப்புவித்து அழைத்துவந்த நாள்முதலாய் உண்பதும் உறங்குவதுங் கண்டேனே ஒழிய வேறில்லை, தற்சமயம் நான் புத்திசாலியாயிருந்தபடியால் பாரிமஷாளோடு கூடி சில வித்தைகளைக் கற்றுக்கொண்டேனெனவும் ஊட்டிவளர்ப்பவர்க்கு வித்தையிற் தேர்ச்சியடைந்தானென்ற சந்தோஷத்தினாலும், "உண்டார்மேனி கண்டாற்றெரியும்" என்ற பழமொழிபோல், இவன்நிறத்தைக் காணவேணுமென்கிற எண்ணத்தினாலும் அடா குழந்தாய்! உன் வித்தையின் திரமைப்படி ஒரு சர்டிபிகெட் பெற்றுக்கொண்டால் எங்களுக்குப் பிறகாகிலும் நல்ல உத்தியோகத்திலமர்ந்து ஜீவித்திருப்பாயென்று சொல்லவும் அதற்கென்ன அத்தாட்சியா என்று அன்றிருந்த ருசியால் மறுநாள் அதிகாலையில் எழுந்து போஜனமுண்டு தாய்தந்தையர்க்குத் தெரியாமல் சவரன்வராகனை எடுத்துக்கொண்டு தன் ஆசைவிஸ்வாசமுள்ள நேசர்கள் இருக்குமிடத்தைத் தேடி நடந்தான்.

இங்ஙனமிருக்க, சொக்காபிரதர் உக்காபிரதர், மக்காபிரதர், யாவரும் ஒன்றுகூடி ஆ! ஆ!! நம்மிடத்தில் அகப்பட்டவன் கொழுத்த கிடாதான் நம்தொப்பைக்கு ஒப்படைக்க சமயமிதுவேயாகும்

என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கையில், கங்கணசீலனும் அதிவேகமாக அவ்விடம்வந்து சேர்ந்து என் பிரியமுள்ள சிநேகிதர்களே உங்களைப்பற்றி என் தாய் தந்தையர்கள் மஹாசந்தோஷமடைந்து என்னையும் மேன்மைப்படுத்தினார்கள் ஆகையால் உங்களை நான் அண்டினதர்க்கு அடையாளமாகவும், நீங்கள் கற்றுக்கொடுத்த வித்தைக்கு மேன்பாடாகவும் ஓர் சர்டிபிகெட் அனுக்கிரகிக்க வேண்டுமாக கோருகின்றேன் இது உம்முடையபாரம் என்று அநேகவிதமாய் வணங்கி மற்ற மீதிபாடத்தையும் காண்பிக்கவேணும் என்றதைக்கேட்ட மேற்படி ஆளமுக்கி அசாமிகள் கொழுத்த சிரிப்போடு நாங்கள் சொன்னதை கொண்டுவந்தீரா, ஆனால் உனக்கு சொல்லிக்கொடுத்த பாலபோதம் இன்றோடே முடிவாக்கிவிட்டு சர்டிபிகெட் தடையில்லை வாவென்று அவன் கையிலிருந்த பணத்தைப் பெற்று அருகிலிருந்த குலாபசுந்தரி, வால்சேட்சுந்தரி, மொழுக்குவத்திசுந்தரி என்னுங்கடு தாசிகளிடத்தில் விடுத்து இவனைப்பார்த்துக்கொள்வீரென சொற்சங்காசிகொடுத்தனர். அந்த மத்தாப்பேடிகள் இவனை இரவுமுழுதும்வைத்திருந்து (அடாதுசெய்வர் படாதுபடுவர்) என்பதர்க்கிணங்கி, பொழுதுவிடியுமுன் அர்ச்சண்ட் சர்டிபிகெட் கொடுத்து மகராஜ சம்பன்னராய் வாழ்வாயென வாழ்த்தி அனுப்பவும் கங்கணசீலன் நடக்கமுடியாமல் பிரதர்களையும் காணாமல் வீடடைந்து (குந்தனையா குரங்கே சந்தடி அடங்க) என்பதுபோல், அப்படி இப்படி அசையாமலுட்கார்ந்திட தாய்கண்டு சர்டிபிகெட் வாங்கிவந்தனையாவெனவும் இதோ வாங்கியிருக்கிறேனென உடம்பைக்காட்டினன் தாய் தந்தையர் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் உற்றுநோக்கிப்பார்த்து "குபேரனிடத்தில் பொருளுண்டானால் தபோதனதர்க்கு அலட்சியமே" அதுபோலில்லாமல், மகாலேடிகள் இவன்மேல்வைத்த அருளினால் உலக சர்வஜன ரகசியமாகக் கொடுத்த பகோடாமெடல், மசால்வடைமெடல், பெலாசுனோமெடலிருக்க இதைக்கண்டு இதுதானோ நீ கற்றுக்கொண்டவித்தைக்கு சர்டிபிகெட் அப்பா இதுமூஞ்சிலிடிவிழுந்தது வேண்டாம் வேண்டாம் அவரிடத்திலேயே கொடுத்துவிட்டு வந்துவிடுவாய் என, கங்கணசீலன் சிரித்து அவர்கொடுத்ததை இனிவாங்க நமது பங்காளியல்ல நான்கொடுத்துவிடுவதும் சரியல்லவென்று (அன்பற்றசிநேகிதரை அபாயத்திலறி) என்ற விகட பழமொழிபோல், சில நன்னடக்கையுள்ள சிநேகிதருடன் சாரவும் ஒருவர் "அநுபோகமற்றால் அவிழ்தம்பலிக்குமாக" சிற்சில பி. வி. கம்பெனியார் விகடன் போஸ்டாபீஸ் வந்து மணியாடரைக்கேட்டு இல்லாமல் போனதும் வதங்கின

கிளைப்போல் முகம்வாடி தொங்கக்கண்டு விகடபூமிதேவி புரண்டு புரண்டு சிரித்தாளாம், அப்பேர்க்கொற்றோர் மருந்துகளைக் கொடுத்து சொஸ்தப்படுத்தினார். நிற்க, கங்கணசீலன்வந்த ஒரு ஆண்டிக்குள் இவனை வளர்க்கும் தாயாகிய சுகந்தமல்லிக்கு தங்கவல்லி என்னும் பெண்குழந்தைப் பிறந்து வளர்ந்து பருவபக்குவமாகி விட்டிருந்தது அன்னவளை (அண்டத்திலில்லாதது பிண்டத்திலுண்டோ) வென, நாளுக்கு நாள் அச்சிறுமியை கைவசப்படுத்தி (அண்ணருமல்ல மாராருமுண்டானால் மண்ணுராசாமி என்னசெய்யக்கூடும்) என்று உல்லாசலீலையிலிருந்து ஓர் நாள் "அன்னமிட்டவரிடம் கன்னக்கோல் வைத்தற்கு" அடையாளமாக பின்னஞ்செய்ததன்றி, புறப்பட்டாரையா சுமார் இரவு பனிரெண்டுமணிக்கு தன்னகரைவிட்டு அடுத்த நாடுசேர்ந்து பொழுதுவிடிந்ததும் போஜனத்திற்கு வழியற்றிருக்க அவ்வூரார் கொஞ்சம் நீராகாரங்கொடுத்தனர் (இவர்க்கென்னகேடு தவரிவிட்டதுகோடு) என்றுப்போல், இவரிருந்த விடத்திலேயே இருந்துவாழாமல் கூழுக்குமலையவந்ததே நிற்க, மறுநாள் யாத்திரைப் பிரயாணஞ்செய்ய எண்ணமுற்று நடந்தனர்.

இங்கு இவ்வித அலங்கோலமாக நிற்க, சுகந்தபுரியில் ஜெகந்நாதனும் சுகந்தமல்லியும் பொழுதுவிடிந்து நித்திரைகலைந்தெழுந்து உத்தமமகளையும் சத்துருபிள்ளையும் நித்திரைவிட்டெழுந்தனரோ இல்லையோவென்று அவரவர் (பெட்ரூம்) படுக்கை அறைபோய்பார்த்தார் கங்கணசீலனையும் தங்கவல்லியும் காணாமலிருக்க புத்திரவாஞ்சையால் சோகபாகமாகிய சேத்திலாழ்ந்தி தரையில்விழுந்து எழுந்து (அழுக்கைத்துடைத்து மடியில்வைத்தாலும் புழுக்கைக்குணம்போகாது) என்பதுபோல், நாம் எவ்வளவோ மேன்மையாக வளர்த்தும் மோசஞ்செய்தனரே என்று திகைத்து பணப்பெட்டியைத்திறந்து பார்த்தார் பெட்டியிலிருந்த பணமும் போய்விடவே பிணம்போல் மூர்ச்சையடைந்து பின்னுமெழுந்து,

தருமஞ்செய்யாபணமும் மருமமுண்டபெண்ணும்
திருடருமாடுமிருக்குமிடத்தை தேடியேபோகுமாம்.

அதுபோல், நாம் ஒருவருக்கும் கொடுக்காமல் வைத்திருந்த பொருளையும், கிடைக்காமல் கிடைத்த பெண்ணையும், அதிக ஆசையாய்வளர்த்த நாசக்காலன் அழித்தனனே என்று நற்குணம்பெருகி "காதற்றதுரும்பும் வாராதுகாணுங்கடு காடுமட்டே" என்றுகங்கணசீலன் சிலவழித்ததுபோக மரந்து மீதியாகவைத்த பொருளையெல்லாம் ஏழை எளியவருக்கே சுபதானங்கொடுத்து புத்திரவந்து மனைவி

யோடு ஜெகந்நாதன் அகந்தபரியை மரந்து உலக ஆசையை துறந்து தபசியாக கானகத்திற்கு அடைந்தனர்கள்.

இவர்கள் காட்சி இவ்வளவு மாட்சியாய் நிற்க, யாத்திரை நடக்கும் கங்கணசீலன் தங்கவல்லியும் போகும் இடைவழியில் வாலிபன் ஒருவன் துணைப்பற்றி வருகையில், அவ்வாலிபனோடு தங்கவல்லியானவள் மெள்ள மெள்ள மிருதுவான வார்த்தையோடு பரிகாசமான வார்த்தையாடி,

இவர்தான் இவர்தான்
உண்டவீட்டிக்கிரண்டகஞ்செய்தவர்



இவர்யார் இவர்யார்
வேசியற்கு திரவியம் இரைத்தவர்

கங்கணசீலன். தங்கவல்லி. துணைவந்த வாலிபன்.

☞ இந்த அம்மாளை பார்த்தீரா.

## துக்டா பார்சி.

(கண்ணேகே ஸங்ககயே) என்றவர்ணமெட்டு.

தங்=ஏனோ என்மேலின்னம் மோடியா-துரையே
நானே யழைக்கிறேனே வா வா வா
வா= மானேமருக்கொழுந்தே மெல்லியேசொல்வதைகேள்
வீணாகவெந்தனை வருந்தாதே-மாதே
தேனே தெளிவடைந்தேன் போ போ போ
தங்=ஜோக்குநடைச்சுந்திரா ஜோடியாயிருவரும்
நோக்கிடுவோம்தெற்கு தேசமே-நாதா
தாக்குதே மாரன்வாளி பார் பார் பார்
வா= விலைமகளர்களால் விழலாண்டியாகினேன்
சீலனைவஞ்சித் திடலாமோ-சகுனை
பாலராஜன் புகழ்பணிந்து செல் செல் செல்

என, தர்க்கமிட்டு (சிரித்தையோ சிரைக்குலைத்தையோ) என்பதுபோல், புன்சிரிப்பைக்காட்ட வாலிபன் "காசிக்குவந்தும் கர்மம் விடாதாம்" அதுபோல நம்மைவிட வில்லையென திகைத்து தடுத்தும் மாது மோகவலைவீசி பையனை மையலுக்குள்ளாக்கி (அழகுபெண்ணேகாற்றுடி அழைக்குறுண்டிகூத்தாடி) என்பர்போல, உண்டவீட்டில் ரெண்டகஞ்செய்த தன் கணவனை ஏமாற்றி துணைவந்தவனை தொடர்ந்து ஓர் பாழடைந்த சத்திரம்போய் சேர்ந்து சரசவார்த்தையுள்ள ஆனந்த வைபோகத்திலிருந்தனர்.

இங்ஙனம் நிற்க, கங்கணசீலன் சில தூரம் நடந்துவந்து தன் மனைவியை திரும்பிப்பார்க்க ஆசைநாயகியைக் காணாமல் திகைத்து "துரியோதனன் குடிக்குச் சகுனிபோல" நான் அந்த தங்கவல்லியின் தாய் தந்தையரை வஞ்சித்ததற்கு சமதையாய் "ஆகாயத்தை பரந்தடித்துபோனதுபோல்" துணையாகத் தொடர்ந்துவந்தவன் நம் மனைவியை கொண்டுபோயினனே என்று (அறக்காத்தான் பெண்டிழந்தான் அறுகாதவழி சுமந்தழுதான்) என்பதுபோல், கதறிகதறி அழுதிருக்க, அடுத்தவூர் அரசன் மகளை ஓர் ஜகஜண்டிராட்சதன் கொண்டுபோய்விட்டான் இதையறியாமல் தன்மகளை திருடிய கள்ளனை கண்டுபிடிக்கும்படி சேவர்களுக்கு ஆக்கியாபித்ததற்கிணங்கி காவலர் காடுமேடெல்லாம் திரிந்து தேடிவருக, அங்கு கங்கணசீலனை சந்தித்து நீ யாரப்பாவென (வாய்கொழுப்பு சீலையாலழிந்தான்) என்பனபோல், வாய்குளறி நான் ஆவலோடு அழைத்துவந்த தங்கமாது காணாமல் அலையலுற்றேனென இதைக்கேட்ட சேவகர்காவலர் நம் அரசன் மகள்பேரை சொல்லுகின்றானே இவன் திருடனே என்று கங்கணசீலனை கட்டிப்பிடித்துக்கொண்டுபோய் காராக்கிரகத்தில் அடைத்துவிட்டு அரசனிடத்தில் தெரிவித்து நின்றனர்.

இப்படி நிற்க, சத்திரத்தில் ஆனந்த காக்ஷியாயிருந்த தங்கவல்லியையும் வாலிபனையும் சில திருடர்கள் வந்து அடித்துபிடித்து அலங்கோலப்படுத்திப் போய்விட்ட பிறகு, இருவரும் கங்கணசீலன் அகப்பட்டிருக்கும் தேசமென்றறியாமல் அவ்வூர் இராஜனிடத்தில் சென்று பிரயாதுகொடுக்கையில், அரசன் இவர்கள் வரலாற்றை யாவும் விசாரித்து வருகையில் தங்வல்லியோடுவந்த வாலிபனுடைய சரிதையைக்கேட்க அந்தவாலிபன் சொன்னதாவது,

விருத்தம்.

ரதிபோல்வந்தொரு மாய்கைதுடர்ந்துவி ரட்டிநல்ல
மதியையுரித்து யிதழ்கொடுத்த மங்கையரால்

பதியாவிழந்து வனமனுகிப் பாரமொழிக்க
சதிகாரியங்குற்றதனுல் சஞ்சலமிகப் பூண்டேனே

வசனம்.—ஐயா! நான் அதிரூபவதிகளாகிய தாசிகளிடத்தில் வைத்திருந்த ஆசையால் அனேக திரவியங்களை கொடுத்து மோசமடைந்து பதியிழந்து விழலாண்டியாகி தபத்திற்காக வனமனுகி வருகையில் இந்த மடமங்கையாகிய பாதகி என்னேடு வலியப்பேசி புருஷனைவிட்டு தொடர்ந்த தோகையினுல்பட்ட துன்பத்தைசொல்லி சகிக்கமுடியாதென்று சொல்லவும்,



## பொய்யனென்னும் புளுகன்.

ஒருவூரிலே விதவையாகிய தள்ளாதகிழவிக்கு இல்லாதபிள்ளை ஒருவனிருந்தான் அவன் தொழிலோ கையிலாகாத கஷ்டம் யாதெனில், பொய்பேசி காசிசம்பாரித்து கள்ளும் சாராயமுங் குடித்து குதாடிவிட்டு வீட்டிற்குவந்து கிழவியை ஏமாற்றி அதிகாரத்தோடு பிரசாதம் அமுக்குவது வழக்கம், ஒருநாள் கிழவி புளுகனை அழைத்து அடா! அப்பா!! இந்த பொய்யைவிட்டு ஜீவிக்கலாகாதாவென்று சொல்லவும் ஆனல், கொஞ்சங்கட்டுசோர் கட்டிகொடுத்தால் வெகுதுலைவிற்சென்று பொய்யைவிட்டுவிட்டு வருகிறேனென உடனே கிழவி இரண்டுமூன்று வேளைக்கு உதவும்படியான கட்டுசாதமூட்டையைக் கட்டிக்கொடுத்து வழிகூட்டியனுப்பினள் புளுகனதைப் பெற்று அடுத்தவூரிற்சென்று கட்டுசாதத்தையொழித்து வீடுசேர்ந்தான் உடனே கிழவியோடிவந்து பொய்யை விட்டனையோவெனவும் அம்மா நான் வெகுதூரஞ்சென்று இந்தப் பொய்யை அழைத்து நீ எங்கேயாகிலுஞ்சென்று பிழைத்திருவென்று விட்டுவிட்டேன் அது என்னைவிட்டு நீங்கி கொஞ்சதூரம்போய் பின்னும் என்னிடத்திலிருந்த அருமையாலும், விஸ்வாசத்தாலும் திரும்பிவந்து என்னைவிட்டுப்போக மனந்துணியவில்லையாம் நான் எவ்வளவோ தூஷித்தும் போகவில்லை ஆகலின் இந்தப்பொய்யானதுபடும் பரிதாபத்தை பார்க்கமுடியாமல் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

என்று சொன்னதுபோல, வேசியர்க்கு திரவியமிறைத்து மோசம்போன இந்த நாசக்காலனுகிய விழலாண்டி சொல்லச் சொல்லச் சிருநகையோடு விடாநகைப்பிலும் மொடாநகைப்புள்ளவராகி ஜனங்கள் முன்னிலுமதிகஞ்சூழ்ந்தார்களாம், பிறகு அரசனும் குஞ்சிப்படைந்து காராக்கிரகத்தில் இருந்த கங்கணசீலனையும் அழைத்து புத்திமதிகளைப் புகட்டி முன்னிருந்த இல்லத்தைப்போ படை

யும்படி கங்கணை சிலனுக்கு திருமணஞ்செய்து அனுப்பிவிட்டு வாலீ பனை முன்போலவே தபசிற்கனுப்பினபின் (ஜனப்பன் வீட்டுக்கோழி தானகவந்து விலங்கில்மாட்டிக் கொண்டதுபோல) தானுயகப்பட்ட தங்கவல்லியை காரியுமிழ்ந்து கண்டார்சிரிக்கச்செய்து கண்ணும்பு காலவாயில்வைத்து கட்டிவிட்டார்கள். ஆகையால், "மண்ணை நம்பி னாலும் பெண்களை நம்பலாகாது" என்று அவ்வூர் சர்வஜனங்க ளெல்லாம் பேசிக்கொண்டு அவரவர் வீடுபோய்சேர்ந்தனர்கள்.

அதுபோல், ஏ போலிதுறவிகளே! மனைவியை தனிமையாக விட்டு நீங்கள் தபஞ்செய்தால் பலியாது உங்கள் மனைவி சொர்க்க மடைந்தபிறகு துறவரமடைந்தால் கீர்த்தியும்பெரும் கொடிபோட்டு பரந்து பரந்து நிற்பவரோ, துறவிகளாவார் என்று போலிதுறவிகளை "சுடுகாட்டுக்குவந்தபிணத்தை வீடுபோகும்படி அனுப்பினதுபோல" பங்கப்படுத்தி அனுப்பிவிட்டு மருதேசம் திரும்பினான்.

உண்டவீட்டில் ரெண்டகஞ்செய்து திண்டாட்டப்பட்டவன்கதை,
கணவனைவிட்டு துணைவந்தவனைதுடர்ந்த தோகையாள்கதை,
வேசியற்குதிரவியமிறைத்து மோசம்போன விழலாண்டிகதை,
முற்றிற்று.

---

சீன் 5-வது,—பேரில்லாநாடு.

கதாநாயகன், { உண்டைசோத்துக்கு கலகமிட்ட குண்டுணி நாரதன்.

இப்பூமண்டலத்தில் தப்பிப்பிரந்த செப்பரிய பப்பரவாயன் திருக்குமாரனுகிய உப்பிலாமணியை நந்தனவருடம் பொரந்தல்மாதம் கந்தல்தேதி, சனிவாரம், மௌனிபிடிக்கும் திதி, அனியாய நட்சத் திரத்தில் இந்த சுபதினத்தில் சோத்தமுக்கி வாத்தியாரிடம் வித் தியாபிவிர்த்திக்காகவிடுத்தனர், உடனே தேரித்தெளிந்த வாத்தியார் *உண்டையமுக்கியை கிழக்குமுகமாக நிருத்தி உப்பிலாமணியை மேற்குமுகமாக உட்காரவைத்து தாக்கிக்கொடுத்தாரையா அரிச் சுவடி, அம்பலச்சுவடி, குட்டிச்சுவடி, கோவணச்சுவடியை கையில் கொடுத்து "சரியோம் சகலமும்வருக நரிவாழ்க நாமேதுணை" என்று மூட்டுப்பூசி இரணியனை ஸ்தோத்திரஞ்செய்து.

அ! ஆ!! *அஞ்சிமுகனே வருக வருக
இ! ஈ!! இடையன்மருகா வருக வருக

---

* அஞ்சிமுஞ்சி - ஐம்முகன்.

ஊ! ஊ!! *உண்டையமுக்கி வருக வருக
எ! ஏ!! எலிவாகனு வருக வருக
ஐ! ஒ!! ஒற்றைப்பல்லா வருக வருக
ஓ! ஔ!! ஔவையென்பாட்டி வருக வருக.

என்று மூலாதாரத்தை சொல்லி பின்னும் சிலவற்றை சொல்லத்தொடங்கினார் இப்படிச்சொல்பவரல்லோ வாத்தியாராகும்,

விகட அகட வண்டிச்சிந்து.

இலக்கணவிலக்கியத்தை—ஈயெடுத்தேக
யீரிரண்டுவேதங்களை எறும்பெடுத்தோட
பலசாஸ்திரமுங்கொண்டு—பறந்து
பாரில்பரந்துமிக வாழ்ந்திடவே.
கந்தல்பூராணங்கள்போய்—ஒளித்திடவே
கலிவந்திங்கு கொண்டாட்டமிட
சந்துசந்தாய்சிருவர்—மீட்டிங்கூடி
செண்டுகளாடி வாழ்ந்திடவே.
சாமிகள்மாமிகள்சீட்டா—அடித்திட
ஜாடியும்புட்டியும் ஓலமிட
பூமியைசர்ப்பம்சுருட்ட—காலன்வந்து
பொய்யோமெய்யோவென்று புலம்பலாச்சு. (தந்தானம்)

இப்பேர்க்கொற்ற வெள்ளைத்தமிழ், பச்சைத்தமிழ், மஞ்சற்றமிழ், கருப்புத்தமிழ், ஊதாதமிழ். சாதாதமிழ் பதங்களை உபதேசித்துவர, பணங்காட்டிப்படித்து பீச் ஓரத்தில் பாஸ்செய்து குண்டோதரன்வேலையும், குண்டுனிவேலையும் வேக்கன்ஸா யிருக்கக்கண்டு முதல் முதல் (திட்டிண மரத்தில் கூர்பார்க்கவேண்டுமென்பதுபோல) வாத்தியார் வீட்டிலேயே உண்டைசோத்துக்காக வாத்தியாருக்கும் வாத்தியார் மனைவிக்கும் கலகத்தைமூடிபோட்டு வெளியூருக்கு சென்று கடைத்தெருவழியாய் வருகையில் அந்த சிலகூட்டங்கள்கூடி கலியாண விவகாரங்களை பேசுகையில் உப்பிலாமணி என்பவனும் அக்கூட்டத்தாருடன்கூடி ஐயா! நான் பெண்வீட்டாரை சம்மதிக்கச்செய்வது என்பாரமாகுமென்று ஓர்பகுடிபோடவும் இதைக்கேட்டிருந்த மாப்பிள்ளை சந்தோஷித்து உப்பிலாமணியை அழைத்துக்கொண்டு வரும்பொழுது சாம்பல்வர்ரி (சாம்பசிவன்) மைத்துனன், மன்னுன்னி (மன்னையுண்டமாயன்) கோவிலில் உற்சவம் நடந்து பிரசாதம் விநியோகித்தார் இவ்விருவரும் அதைப்பெற்று விடு திரு

* உண்டையமுக்கி - தொப்பைக்கணபதி.

ம்புகையில் உப்பிலாமணி வாழைப்பழம் தோல்சரக்கி குண்டாங்கரணம் பல்டியடித்தான் உடனே திடப்பட்டெழுந்து நிற்பதைக்கண்ட ஜனங்கள் கலீரென சிரிப்படைந்து (அள்ளாமல் குறையாது இல்லாமல் பிறக்காது) என்பதுபோல், உண்டைகோத்துக்காக குண்டாங்கரணமடித்தானென்று உரத்துக்கூவி சொன்னதும் அந்தப்பட்டத்தைப்பெற்று பெண்ணிருக்கும் இடத்தை நாடிச்சேர்ந்து பெண்ணின் மாதா பிதாக்களுக்கு சந்துஷ்டியையூட்டி அம்மம்மா உங்கள் பெண்ணுக்கு அமைந்த மருமகப்பிள்ளையின் விவேகமும், நல்லகுணமும், ஞானமும், கல்வியும், ஒழுக்கமும் அரசம் இலை பழுப்புக்கு சமமதையானது நேரில்பார்த்தால்தெரியவருமென அவர்கள் சந்தேகங்கொண்டு ஆனந்தமடைந்தார். (இவ்வளவும் 0 பூஜியம்) நிற்க, மறுபடியும் உப்பிலாமணி இவரிட்ட சாதத்தையுண்டு திரும்பி பிள்ளையாண்டானைக்கண்டு பெண்வீட்டாருக்கு உன்மீது சம்மதியில்லைபோல் தோற்றுகிறது நானென்ன செய்வேனென்றதைக்கண்ட மாப்பிள்ளை திடுக்கிட்டு தங்களை நம்பிய எங்களை நடுத்தெருவில் விட்டனையே என்று அனேக வினயத்தோடு அழைத்து போஜனம் செய்த பின்பு நீங்கள் திரு அமங்கலியத்திற்கு நாள்வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவும் பந்தக்காலைவிட்டு வந்தக்காலைநட்டு பந்தல் போட்டு பலவிதமான பச்சைக்கல், செங்கல், கருங்கல், பாறைக்கல் என்று சொல்லும்படியான கற்களிழைத்து அலங்கரித்து தயாராக வழிமருத்திருக்கையில், உப்பிலாமணி பெண்வீட்டாரை தயார் செய்து பூவரசனிலை வெற்றிலையும் புளியங்கொட்டை பாக்கும் பிழ்கண்டிருக்கும் பத்திரிகை தாம்பூலம் ஊர் எங்கும் வைத்து கலியாணத்திற்கு அனைவரும் வந்துசேர்ந்தனர்,

## விகடத் திரு[illegible]மணப் பத்திரிகை.

ஐயா.................................................இவர்களுக்கு,

நிகழும் துன்னித வருஷம் ஆடுகத்துகிறயீ 35உக்குச் சரியான பரதேசிவருஷம் நாலுகால்யீ 44உ அஷ்டம சனியன்வாரம் அமங்கள திதி மரணயோகம் கூடிய $2\frac{1}{2}$-நாழிகைக்குகீழ் $1\frac{1}{2}$-நாழிகைக்குமேல் தெல்லவாரிவூரில் பேரில்லாதெருவில யாருமில்லாகிரஹத்தில்,

லண்டவாயனுக்கும், தண்டபேடாரிக்கும்,

நடக்கும் திருஅமணத்திற்கும், இடையிடையே நடக்கும் சங்கார கிரியைக்கும், முன்னம் சேளபாசனத்திற்கும் எவருமில்லாதிருந்து வந்து ஷெ தம்பதிகளை ஆசிதரும்படி கோருவீர்கள்.

நிற்க, புட்டம்பெருத்து திட்டம்பார்த்து வைத்த இத்தியாதி வைபவங்களோடு விவாகம் நடத்தினர். இதுவல்லோ, சகியாத கலியாணம் பிறகு, பந்தியிலிருந்து அனைவரும் போஜனமருந்துகையில் உப்பிலாமணிக்கு உண்டைசாதந் தொண்டைவழிசென்றதும் கலகம் புட்டத்தை துளைத்துகிளப்பவே திடீரென எழுந்து ஐயா! என்காரியம் முடிந்தது உங்கள்வேலை முடிவதற்குள் "சூரியன்மீது குரங்கு பாய்ந்ததுபோல" இந்தப்பந்தல்மீது "அக்கினி கக்கினனே" ஐயோ பாவமென்று உண்மையில் பயந்தவனைபோல் பயங்காட்ட பேதமை ஜனங்கள் திசைதப்பி ஓடினர்கள், உடனே அங்குள்ள பண்டுபலகாரத்தையெல்லாம் ஒன்றாய்சுருட்டி வாயில்போட்டுக்கொண்டு உப்பிலாமணி மறைந்தான். சிலபராக்கிரமசாலிகள் தயிரியத்தோடுற்றுப் பார்க்கையில் ஒன்றுமில்லாதிருக்கக்கண்டு அடா! பாவி இப்படிசெய்வார் உலகிலுண்டோவென திக்பிரமைகொண்டு "குட்டிக்கலகஞ்செய்வோர் குட்டுபட்டேசாவான்" அதுபோல் அடக்கிமுடக்க திலகமொன்றிருப்பாரென சொல்லியவண்ணம் அவரவர் இருப்பிடமேகினர்.

இவ்வித கலகபயத்தை மூட்டிச்சென்ற உப்பிலாமணி இன்னம் தகுந்த கலகத்தைமூட்டி பரிசுபெற நமக்கு தக்கவிடம் இருக்கிறதோவென எண்ணி நடக்கையில் அங்கு ஒரு பெரிய நகரம் கண்ணிற்கு புலப்பட்டது உப்பிலாமணி அவ்விடஞ்சேர்ந்து இளைப்புற்றவனைபோல் கனகசுந்தரன், ஞானசுந்தரன் என்னும் பெரியகுடும்பத்தினர் வீட்டுத்திண்ணையின்பேரில் போய் உட்கார்ந்திருந்தான் அத்தருணம் கனகசுந்தரனும் ஞானசுந்தரனும் வெளியேசென்றுதிரும்பி வீட்டுக்குள் நுழையும்போது திண்ணையில் உட்கார்ந்திருப்பவனைப் பார்த்து நீர் ஆரையாவெனகேட்கவும் உப்பிலாமணி எழுந்து நின்று அதிவணக்கத்துடன் ஐயா! நானோ பாட்டைசாரியென நயமாகபேசி உரவாடி அங்கு வசித்திருக்குமளவில், இணைபிரியாதிருந்த கனகசுந்தரன்மனைவி கியானவதிக்கும், ஞானசுந்தரன்மனைவி ஞானவதிக்கும் ஒருவரைக்காணுமல் ஒருவர் பொறாமைப்பட்டதாகச் சொல்லி கலகத்தை விபரீதப்படுத்தினன்.

இவ்வித கலகத்தில் ஒருவர்க்கொருவர் பேச்சிவார்த்தையற்று முகத்திருப்புற்று ஓர் நாள், தத்தம்மணாளரோடு நமது வீட்டில் வந்திருக்கும் விருந்தாளியிடத்தில் அவதூறான வார்த்தையை சொன்னாளென்றதாக சொல்லி துக்கித்தனர், இதைக்கேட்டிருந்த உப்பிலாமணியும் அங்கங்கிருந்து தலையாட்டிவிட்டான் இவ்விரு அண்ணன் தம்பி உண்மையென நம்பி "கேள்விச்சொல் மூளாநெருப்பு"

என்பதறியாமல், அடிடல், தடிடல், குத்துவரிசைகளைக்காட்டி (தீராக் கோபம் போராய்முடியும்) என்பதுபோல், வெளியில் வந்துவிட்டனர். நிற்க, பதிவிரதா சிரோன்மணிகளும் ஒருவருக்கொருவர் மயிர் பிடித்துக்கொண்டு ஆர்பாட்டம் செய்திருக்கையில் செந்தலை வீரர்கள் வந்து கும்புகூடியிருப்பவரையும், சண்டையிட்டிருப்பவரையும் மடக்கிக்கொண்டு விசாரணை செய்கையில் உப்பிலாமணியால் நேர்ந்த கலமென்றறிந்து பலவிதமாகபேசி தடிப்பக்கட்டையாலும் முரத் தாலுங்குட்டி உனக்கென்ன முனிபிடித்ததோவென தூஷிக்கையில், உப்பிலாமணி "ஜாட்டியடிபட்டவன் தடியடியெப்படி யிருக்குமென யோசித்தவனைபோல்" மரம்போல் பேசாமலிருந்தான்.




குண்டுமணிநாதன்

## விகட நாமாவளி புரட்டு.

ஆசைப்பெருங் கடல்வெள்ளத் துள்ளழுந்தும் மனதே
ஆவியொழிந் திடுமுன்னம் அன்பர்பணிகொள் ளாதே
காசைத்தேடி நீ யோரைக்கூடி கள்ளுசாறு குடித்தே
குத்துமுதை படாவிட்டால் குடும்பத்திற்கா காதே
வேசையரின்வா சற்படிக்கே வேண்டும்பூசை செய்தே
விளங்கிடுவா யின்ஸால்மெண்ட் டரசுதனின் மீதே
ஓசைமணி குண்டுமணிபோல் ஊரெங்குந் திரிந்தே
ஒன்றிரண்டாய் செய்வோர்க்குயர் பதவிதப பாதே.

என, பாடியவண்ணம் சந்தைகூடியிருக்கு மிடத்திற்கு "கலியுக விகடன்" வந்து இவனை முனிபிடித்ததைப் பார்த்து கன்னிகளு

ஏப்பமிடுகிறார்கள், என்று சொன்னதை அங்கு சூழ்ந்திருந்த கூட்டத்தார் கேட்டு தாமே இவனுக்கு பரிசு அளிப்பீரென கோரிக்கொள்ளவும் "கலியுகவிகடன்" புரவியை (பூனையை) வீட்டு கீழிரங்கி பரிசுகொடுக்கும் விதத்தைச்சொல்லி சீர்திருத்தல்.



## பாதரட்சை பரிசுபெற்ற படுதோஷிகள்.

இன்னாட்டிலும், என்னாட்டிலும், நன்னாடாகிய, தென்னாட்டில் மூன்றுபேர் அண்ணன் தம்பிகளிருந்தார் அவர்கள் செல்வச்செருக்கால் கல்வியென்பதை கருதாமல் தங்களது ஊரை நாடிவரும் வித்வான்களை எல்லாம் அவமானம் செய்வது இப்படி சதாகாலமும் செய்துவந்தால் இனி யாவரும் நம்மை மதிப்பாரென்கிற கொர்வத்தோடு இருந்தார்கள்.

நிற்க, வடதேசத்தில் மல்லம்மா, நல்லம்மா, சல்லம்மா என்கிற மூன்று மாதர்கள் எங்கள் வித்தையை ஜெயம்பெற்று மாலையிடலாமென்று ஓர் செப்போடு வெளியிலடித்து ஊரெங்கும் பறைசாற்றி வசித்திருக்கையில் இந்தமூன்று அண்ணன்தம்பிகள் இதைக்கேட்டு புரப்பட்டு வந்து வெளியிலிருக்கும் செப்போட்டை "படிப்பில்லாத மூட்டாளையால்" ஒருவரை வாசிக்கச்சொல்லி இதுதானா; கேவலமாகிய மாதர்களை ஜெயிப்பது ஓர் பெரியகாரியமோவென்று மமதையோடு உள் நுழைந்ததை மாதர்கள்கண்டு ரண்டி ரண்டி; கூர்சண்டி; ஏமண்டி என தெலுங்குபாஷை பாஷித்தனர், இது யின்னதென அறியாத மூன்று மூடர்களும் ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்து "ஆந்தைமுழிப்பதுபோல்" முழித்து இதேதோ கன்னடபாஷையில் கசமால பாஷையோவென்று திகைத்து ஒன்றும் பேசமுடியாமல் வெளியில்வந்து, நாம் இந்த பாஷையை கற்றுக்கொண்டுதான் இம்மங்கையரை வெல்லலாமென்று வாத்தியாரைத்தேடவும் ஒருவன் நாம் இவ்வித்தையை கற்றுக்கொள்வதற்குமுன் மக்காவுக்கு கொக்குபிடிக்க உபாத்தியாயர் போவாரோ, (அல்லது) நாமே போவமோவென்றுசொல்ல மற்றொருவன் ஆனால், இந்தவூரின் கடைத்தெருவிற்குப்போனால் சீக்கிரமாக கற்றுக்கொள்ளலாமென்று மூவரும் சம்மதித்துப்போய் கடைத்தெருவின் முதலில் மூத்தவனும், மத்தியில் இளையவனும், கடைசியில் அதற்கிளையவனுமாகநின்று வருபவர் போவரின் வாய்பார்த்திருந்தனர்.

இவ்வாறிருக்கையில்; அங்கு ஒருசக்கிலி செருப்புதைத்து விற்க அவனிடம் வழிப்போக்கன்வந்து செருப்பின்விலையாதென அதற்கு

சங்கிலி ஒகசெப்பு ஓகருகரி வென்றுசொல்ல இதை முதல்நின்றிருந்தவன் கேட்டு கற்றுக்கொண்டான். பிறகு; சிலபாட்டைசாரிகள் கும்பனைகப் பேசிக்கொண்டிருக்க திடீரெனவந்து ஒருவன் உங்கள் காரியம் முடிவாய்விட்டதாவென மற்றொருவன் தானிகேமி சந்தேகமென்றான் அதை மத்தியிலிருப்பவன் பாடஞ்செய்தான். நிற்க, கத்திரிக்காய் கடையில் ஓர்மாதானவள் வியாபாரம் செய்து கொசுராக இங்கொசுட்டிவெய் என்றதும், கடைசியில் நின்றிருந்த இளையவன் கேட்டு மனதில்வைத்துக்கொண்டு மூவரும் ஒன்றாகசேர்ந்து அம்மாதர்களை இனிவெல்லம்போல்வென்றுவிடலாம் (அன்றுமில்லைதையல் இன்றுமில்லை பொத்தல்) என்பதுபோல், நமக்கு என்றைக்கும் ஜெயமே வருமென்ற குசாலத்தோடுவந்து மறுபடியும் அம்மங்கையரைக் காணவும், முன்போலவே மாதர்கள் மரியாதைசெய்ய மூத்தவன் "ஒகசெப்புஒகருக" வென்றான், இதைக்கேட்டமூத்தவள் (மீருமாதிகவாடோ) தெரியவில்லையெனவும் மற்றொருவன் சும்மாயிருக்காமல் "தானிக்கேமி சந்தேகம்" என்றதும், பாதட்சை கொண்டு பலவிதமாய் மாதர்கள் ஜாடினர். இதைக் கடைசியில் உட்கார்ந்திருந்த இளையவன் இக்காட்சியைப்பார்த்து "இங்கொசுட்டி இங்கொசுட்டி" என்றுகெஞ்சவும், பெண்கள்சிகாமணிகள் பின்னும் மூவர் தலைமீது அடித்துவிடவும் பரிசுபெற்று தன்னகரடைந்தார்கள்.

ஆகையால், (ஆகடியக்காரன் போகடியாய்ப் போவான்) இனி கலகத்தின்மீது மண்ணைபோட்டு சாக்கிரதையாய் பிழைப்பாயென்று "முன்னொருகால் கெர்வத்தோடு இராவணனென்னும் பத்துதலைப் பூச்சியானது கைலாயகிரியை பேர்க்கும்பொழுது பார்வதிசமேதர் கண்டு தன் பெருவிரலால் அழுத்திவிடவும் மூட்டுப்பூச்சிபோல் அழுந்திகிடக்கையில் நாரதர்பார்த்து (பிட்டுக்குந்துவிதலையில் பாராங்கல்லை தூக்கிவைத்திருப்பதுபோ) விருக்கின்றனையேவென்று நகைத்து ஒரு தந்திரஞ்சொல்லியேகினர். உடனே பத்துதலைப்பூச்சி தன் தலையிலொன்றைக்கிள்ளி கையிலொன்றை ஒடித்துப்பூட்டி நரம்புகளால் மீட்டிப்பாடவும் பசுபதி வரமளித்தனுப்பினர்." அந்த தம்புரையும், "இந்திரசித்தன் யாகத்தை அனுமந்தன் கோமாளிகூத்தாடி அழிக்கையில் அணிந்திருந்த கோணல்" குல்லாவையும் தந்தேன் சுகமாகவாழியென்று யாவருக்கும் காட்சியளித்து நடந்தனன்.

உண்டைசோத்துக்கு கலகஞ்செய்த

குண்டுணி நாரதன்கதை

முற்றிற்று.

---

சீன் 6-வது,—கஜேந்திரநகரம்.

## கதாநாயகி.

கடல்ஜலத்தை
அட்டாலிதைப்பேனென்னும் } காந்தாரி.

தடாகத்தில் சதா ஜலம் நிறைந்துள்ளதுபோல் சீரும், சிறப்பும், செல்வப்பெருக்கும், கீர்த்தியும் விளங்கிய கஜேந்திரநகரத்தை தனசேகரமஹாராஜன் பரிபாலித்துவருகையில், தன்மனைவி குணசேகரிக்கு * சடையாண்டி அருளால் (சாகரகாலத்தில் சங்கரா சங்கரா) என்றதுபோல், ஓர் பெண் குழந்தையை பெற்றதும் சேடியர்களால் தனசேகர பூபதி சேதியறிந்து சோதிடரை வரவழைத்து லக்கனங் கணிக்கச்சொல்லவும் அரசன் ஆக்ஞைப்படி சோதிடர் கணிதங்குறித்து காந்தாரியென, நாமதேயமிட்டு வெகுமதிபெற்றுச்சென்றனர். (ஆரணியமான அழகாபுரிக்குஒரு கோரணியமான குரங்குவந்தது) என்றறியாதரசன் இத்திருப்பெயரைகேட்டுமகிழ்ந்து நாலொருகோலமாய் பொழுதொருகழுதையாய் வளர்த்துவருங்காலில் பெருக்குதருந்த பெருமையாய் (காந்தாரி) காட்டுமிருகங்களை நாட்டிலோட்டுவதுமாக யிருக்க தன்மகளை தண்டிக்கவில்லையென்கிற கருத்து குடிகளுக்கு வருத்தமாகயிருந்தும் (பட்டம்பெருத்தவனுக்கு பூமியுமொடுங்கும்) என்பதுபோல், பயந்திருக்கும் நாளில் அரசனும், அரசியும் வாய்வுபகவானை வாகனமாகக்கொண்டு விண்ணுலகம் எழுந்தருளினர்.

இவ்வாறிருக்கையில், காந்தாரிக்கு தன் பந்துவர்க்கத்தாரால் மகுடஞ்சூட்டப்பெற்றதும் குடிகள் மனந்திகைத்து காளைவிட்ட வேலையை நல்லால் நடத்தும் குடிகளை சதா இம்சைபுரிந்தே வருவது பெருந்தொழிலாயிருக்கையில் (அதிஅக்கிரமானவூரில் கொதிக்கிரசீனும் சிரிக்கும்) என்பதுபோலும்,

தங்கிபிடாரியை கண்டதும்
மண்டலமாரியும் மறைந்ததாம்.

என்றதுபோலும், காந்தாரி அரசிலுட்கார்ந்த நாள்முதலாய் விண்மாரியற்று மண்மாரிபெருக்க குடிகள் மனம் மெலிந்து இம்மங்கையின் கொடுமை ஒருபக்கமென்றால் மழையில்லாவருமை இருபக்கமும், "ஊருக்கு ஒருபக்கம் இடியென்றால் மத்தளத்திற்கு இரண்டுபக்கம் அடிபோல்" பாதைபடிந்தாகின்றனவென்று (அருமையற்ற ஊரிலே எருமையுங் குடியிராதென) சமஸ்த நாடுவிட்டு மற்றோர் நகரத்தைச்சேர்ந்து சுகமாக வாழ்ந்திருந்தனர்.

---

* சடையாண்டி - சங்கரன், சிவசங்கரர், என்றும் சொல்லப்படும்.

பிறகு, அதிக ஆர்ப்பாட்டத்தோடு அரசபரிச்ரயமும் காந்தாரி தனதாசகசிரேந்தபிரஜைகள் சகரைவிட்டுநீங்கின காரணத்தைதவிசாரிக்கையில் பஞ்சத்தின் கொடுமையால் விலகினரென்று உணர்ந்து "தன் நீதியில்லா செங்கோலினால் மாதமும்மாரி பற்றதென்பதறியாமல்" கடலைவற்றச்செய்குவேன் பாருங்களென்று (அக்கினிமலையில் கர்ப்பூரம் பிரயோகித்ததுபோல) கரத்தில் ஓட்டையேந்தி கடற்கரை சேர்ந்து ஒருவருடகாலமாய் கிணற்றில் கவலைப்போட்டிறைப்பதுபோல், இரவும் பகலுமாய் இறைத்துக்கொண்டிருந்தனள்.



கடற்கரை. ஜனங்கள். அரசர்கள். காந்தாரி. கலியுகவிகடன்.

இவ்வித அற்புதானந்த காட்சியை கேள்வியுற்ற சகலதேசத்தரசர்களுந் திடுக்கிட்டு இதென்ன விபரீதகோலமாயிருக்கிறதே நம்மைப்போலுள்ள ஆண்பாலர்களும், பேதமையாகிய பெண்பாலர்களும் அரசசெலுத்துகையில் இப்பெண்ணின் நீரத்தைபோலும், தலைத்தனத்தைபோலும் பார்த்ததுமில்லை கேழ்விப்பட்டதுமில்லை என்று தத்தம் சேனைகளுடனும் குடும்பத்துடனும் புரப்பட்டு கஜேந்திரதேசத்தன் கடற்கரைவந்து வளர்திரண்ட ஜனங்களோடு குழ்ந்துகொண்டனர். இதையறிந்த காந்தாரி சற்றேனும் பயப்படாமல் வந்திருக்கும் ஜனத்திரளைப்பார்த்து அல்லி, ஆரவல்லி, சூரவல்லி, மகாராணிகளும் என்னைப்போல் வருணதேவனை சிறையிலடைக்க ஜலத்தோடு உத்தம் செய்தனர்களோவென்று மமதையான வார்த்தைகளைபேசி தூஷிக்கவும் வேடிக்கைப் பார்க்கவந்தவர்கள் (என்னவாயிருந்தாலும் பெண்புத்திபின்புத்தி) தான், போகப்போகத்தெரியும் உனனுடைய வன்னமெல்லாம் என்று சும்மாயிருந்தனர்கள்.

31

விகட நாமாவளி பாட்டு.

பூமிதனில் எப்பொருள்கள் போயிடினும் நன்றே
புலையரின் பாசைவிடார் பந்தியிலே நின்றே
சாமியிலும் காமியிலும் பெரியசாமி யென்றே
சாம்பலையுஞ் சமத்தையும் சாத்துவதும் நன்றே
காமியாசை விட்டொட்டில் காய்கனியை தின்றே
காலத்தைப் பொழிக்கொணுதோ பத்திமக்குத் நன்றே
ஏமசெப்பி சுவினதும் எருமைமிடா கன்றே
என்னாரகற்றிடினும் பெண்கள்புத்தி பின்னே.

இந்து சொல்லொரு காலத்தின் கண்காட்டியாயிருக்க, "கலியுக விகடன்" கூட்டத்தை நெருக்கிப்பார்த்து "அடிபோடி பித்தனே உன்சாதுரென்டும் போத்தலே" (உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ) என்பதுபோல், இன்றைக்கல்ல இன்னம் யுகாயுகம் பிறண்டபோதிலும், அகட விகட அகஸ்தியர் என்னேசரைப் போலும், * சப்பாணிபோலும் வர உன்னாலாகுமோ, உன்னப்பனாலும் ஆகுமோ வந்திருக்கும் ஜனங்கள் கைவெடுத்தால் அப்பொழுதே கொசுபோலாய்விடுவாள் இதுவரையிலும் இவளை உயிரில் வைத்ததே ஆயிலும்நன்றே ஆழக்குழிவெட்டி அமுக்குகிறேன் பாரும் என் மானிடரே கேளுங்கள் ஞானியரே என்று, மனதிலேயே பதிப்பித்துக்கொண்டதுமன்றி பிரஜைகளுக்கும் ரகசியமாகவினவி காந்தாரியைப்பார்த்து அம்மா! "உன்றனக்கொட்டின நேனோ ஒரு மந்திரஞ்சொல்வேன் கேளே" இந்த சமுத்திரத்தை நினைக்குள் இறைத்துவிடும்படியான விதத்தை சொல்லுகின்றேன் கேள் என்று ஒரு சந்திர மந்திர தந்திர லோசனை உபாயஞ்சொல்லத்தொடங்கினான்.

மலர் 1.] சிரிக்கதை. [இதழ் 3.

## இருமாப்படைந்த இருளச்சி.

சிங்களதேசத்தின் இருண்டகாட்டில் மிருகங்களை வதைத்து புசித்து பிறிக்கு வழிபோக்கரையும் துரத்தி வதைத்து வசித்திருக்கு மொருவன் இருளச்சி கொலங்கொண்டு காம் மிருகங்களையெல்லாம் சம்மதிக்கின்றேனே (ஒருபெருத்தாலும் தானுமோர்ந்தன்றறியாமல்) நாமும் ஆசார்க்கு சரிபொருத்தவனாமிசே என் அரசபுரியக்கடாத இத்தருணம் எதிர்த்தசாதிலும் சரி அவர்களை ஜெயித்து அரசாள்வித்த சன்கெனறு "ஊமை கனுகண்டதுபோல" ஒரு குருட்டு

* சப்பாணி - சத்திவினாயகர்.

மதுரா புரியைக விகட வைமயம்,

...ஸ்மிசாதம் காட்டைக்கடந்து நடந்துவந்து அங்கிருந்த ...ராமெடை தன் கொள்கையைச்சொல்லி சவாரசெய்து அரசன் உத்தரத்திற்கு வரும்படி பேரிகை தட்டினள்.

இந்த சப்தத்தைக்கேட்ட வேந்தன் ஆச்சரியமுற்று மந்திரி களை அழைத்து விசாரிக்கையில் மந்திரிகள் ஒளித்து இருப்பதை ... இருளச்சிபொய்த்த விளம்பி தந்திரத்தால் தண்டனைசெய்து விடு வேனென பாருங்களென்று தமது ஊரில் தூக்குமரத்தை நாட்டுவித்து மந்திரியானவன் பொய்சந்நியாசி வேடம்பூண்டு தூக்குமரத்தின் அரு கில்வந்து இருமென கூச்சலிட்டு; ஆரோ ஒருவன் தூக்கிலிட்டுக் கொள்பவனை தடுப்பதுபோல் அடே! வேண்டாம்வேண்டாம் நான் போகின்றேன் பொறு பொறுவென்ற சப்தத்தைக்கேட்ட இருளச்சி ஓடிவந்து பொய் சந்நியாசியின் கையைப்பிடித்துக்கொண்டு இதெ ன்ன ரகசிய சேதியென உடனே சந்நியாசி இருளச்சி முகத்தை நோக்கி அம்மா நான் தேவேந்திரன் அரசை ஆள்வதற்காக எத்தனை காலமாக தவமிருந்து இம்மரத்தைநாட்டி காத்திருக்க (கொக்கிற் குப் பல்லி முட்டுக்கு சகுனிபோல) இப்பொழுது எங்கிருந்தோ ஒரு வன் முன்னேற்றக்கொண்டான் நான் இத்தக்கயிற்றை மாட்டிக்கொள் ளவும் வகையற்றவனாயிருக்கிறேன் எனவும், இதைக்கேட்ட இரு ளச்சி நீ அவ்விடம்போய் சேர்ந்தவுடனே எனக்கு தெரிவிக்கிறா யின் ஆனால், இதோ கயிற்றில் மாட்டிக்கொள்ளும் முறைதனை காட்டுகின்றேன் வாவென்று தூக்குமரத்தின் அருகில்சென்று,

விசித்திர விடு விருே.

"*சாசனேவந்தவரோ சதிரானவரோ
உனக்காகாதவரித் துள்ளிருக்க
எனக்காகநீ மாட்டிக்கொள்ளாதே." விடை (...)

சாகிறேன எனியின் பீதேதி கயற்றை கழுத்தில்மாட்டிக்கொண்ட பொய்சந்நியாசிபாகியமந்திரி பலகையை தட்டிவிட்டு வேடத்தைமாற் றிக்கொண்டு "தூக்கிலுங்குருவி தொங்குவதுபோல்" தொங்கலாயி னமன்பதவிசேர்ந்த இருளச்சி இருப்பதை பார்த்து அரசர்முதலிய யாவருங்கண்டு காரியமிற்ந்து காலாறுத்தனர்.

அக்காலக்கெதிபோல் காந்தாரிகளு (கடல்தாண்டி ஆனையுண்டு காலவாய்தாண்டா எலிக்கிலி) இதற்கென்செய்யலாம், என்றுசொல்லி

---

* மின்வலை மீறுக்கு சொன்னதாகவும், தூக்குமரம் தங்கிருந்தை சொ ன்னதாகவும், சோராயமி சோராயைக்குக்கு சொன்னதாகவும்சொல்லலாம்

பனிச்சென்று தன் ஜோதி வெளிச்சத்தைக்காட்டி (கடல் செ..த்தால் விளாவ நீரெங்கே) எனவும், காந்தாரி திடுக்கிட்டுத் த..ரி கடலில் விழ, ஓர் பெரிய மச்சம் வந்து விழுங்கிவிட்டது. "கலியுகவிகடன்" அடடா! இந்தம்மாள் நமது சக்ரவர்த்தி மூரட்டுராஜனிடத்திலிருந்து ராஜ்ஜி..த்தை தம்வசப்படுத்துந் தருணம் கடல்நீரை காத்தாய் பரக்கச்செய்கிறேனென்று ஓட்டைக் காதிலேந்தி புறப்பட்ட மாது தன்னை திருஷ்டாந்தமாக சென்னை கோட்டைக்குள் வைத்தவரே யிப்பொழுது எப்படி மூளைத்துக்கொண்டா ளென்றிருந்தேன் கடைசி முடிவில் பார்க்க கையிலாகாத காந்தாரி கடற்கரைக்கு பலியாயினள் என்று தொப்பையைத் தட்டி எப்பமிட்டிருந்தான்.

இக்காக்ஷியைக்கண்ட சகல தேசத்தரசர்களும் சர்வ ஜனத்திரள்களும் கெக்கே வியாபாரஞ்செய்து ஆனந்தக்கடலில் மூழ்கி கூத்தாடக்கண்ட ஆதிசேஷனுந் தலையசைத்தானென்றால் இன்னமும் இவ்வேட்டில் எழுத இடந்தருமோ.

## வினா விடை.

சர்வ ஜனங்கள்.—ஐயா தங்களுக்கு மாதா பிதா யிருக்கின்றனரா?

கலியுகவிகடன்.—ஆ! ஆ!! உண்டு எப்படியெனில் (ஆகாயம்) பிதா, (பூமி) மாதா, (சூரியன், சந்திரன், நக்ஷத்திரம்) என் சுற்றத்தாராகுமென்று சொல்லுகின்றார்கள்.

சர்வ ஜனங்கள்.—தங்களுடன் கூடப்பிறந்தவருண்டா?

கலியுகவிகடன்.—ஊரைச்சொன்னாலும் பெரியோர் பேரைச் சொல்லக்கூடாது நுட்பமாகச் சொல்லுகின்றேன். கிரேதா யுகத்தில் ஆண்டவன் (மா) திரேதா யுகத்திலாண்டவன் (வி) எனதண்ணர்கள் (சு) துவாபர யுகத்திலாண்டவன் நான். நாங்கள் மூவரும் ஒன்றுசேர்ந்து கலியுகத்தில் வசிக்கின்றோம் ஐயா அனந்த தெடுத்தால் என்ஞான் மெய்யா பொய்யா அல்லவரே நல்லவரே (ஜெகத்.)

நிற்க, இவ்விதம் அற்புதானந்த விசித்திர வரலாறைக் கேட்டிருந்த சகலரும் அடைந்த சந்தோஷ குதூஹலத்தை சுமக்க முடியாமல் விடைபெற்று தங்கள் தங்களிருப்பிடமேகி வசித்தனர். கலியுகவிகடனும் மற்றோர் பட்டணத்துக்கு ஏகினன்.

கடல் ஜலத்தை ஓட்டா லிறைப்பேனென்னும்

காந்தாரி கதை

முற்றிற்று.

---

# மஹா பூலோக விகடனென்னும்,

## 7-வது,—திண்டாட்டநகரம்.

கதாநாயகி, கதாநாயகன்.

மாமன், மாமி, நாத்தி, மணாளன், மைத்துனன்
இவர்களை துன்பப்படுத்திய சம்சாரி.
திண்ணையிலுறங்கி மண்ணைப் பிடுங்கும்
மன்னார சாமி.



☞ இதுதானையா பெரிய திண்டாட்டநகரம்.

கேரளநாட்டில் ஓர் வைசியன் தன் மகளை வெகு அன்போடு வளர்த்து விவாகஞ் செய்துகொடுத்து இனி சுகமாக நீயும் உன்புருஷனும் நகமும் சதைபோலும், பூவும் நார்போலும் ஒற்றுமையாயிருந்து நல்லபேரும் கீர்த்தியும் கொண்டுவருவாயம்மாவென்று புத்திமதி புகட்டி மாமியார் வீட்டிற்கு அனுப்பினார். இந்த அம்மாள் வந்ததும் (எட்டிப்பார்த்த விடம் குட்டிச்சுவர்) புருஷனுடைய உத்தியோக மிழந்து கரிசட்டிமுதல் யாவும் விற்று உண்டு காலங்கழிக்க தன் மணாளன் கடிதாசியாடி சம்பாரிப்பதும் மண்ணைப்பிடுங்கி மந்தரித்து சம்பாரிப்பதுமாக வந்தான்.

ஓர்நாள் திண்ணையிலுறங்கிக்கொண் டிருக்கையில், அகஸ்மாத்தாக ஒருவன்வந்து மந்தரித்துக்கொண்டுபோகும்போது சந்தோஷப்பட்டு கொஞ்ச திரவியம் இனாமாகக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டுகடைத்தெருவிற்குச்சென்று சிலபதார்த்தங்களைசேகரித்து தன் தம்பியிடத்தில் கொடுத்தனுப்பி சீக்கிரத்தில்சமைக்கச்சொன்னான். இதைக் கொண்டுவந்த சிறுவன் தன் அன்பற்ற அண்ணியிடத்தில் கொடுத்து சீக்கிரத்தில் சமையல் செய்யென்றான். இதைக்கேட்டதும் கேளாததுமாக அண்டைவீட்டுக் காரியங்களை பேசிக்கொண்டிருந்தாள் உடனே நாத்தனார் கண்டு அம்மா அயலாருடைய

வார்த்தையைப் பேசினால் நமக்கு ஏதாகிலும் வருமா நம்முடைய வீட்டிலுள்ள வேலைகளை பார்க்கக்கூடாதாவென்று வாயைத் திறந்ததுதான் தாமஷம் (வந்ததே சண்டை இறக்கடி கூடை) என்பது போல, ஆ! ஆ!! உனக்கு இவ்வளவு அதிகாரங் கொடுத்தவர் யார் என்று தன்வாலை அன்றுதான் அவிழ்த்து விட்டுவிட்டு என்னை பெற்றதாயும் தந்தையும் இத்தனை அதிகாரத்தோடு அதட்டி அழைத்ததில்லையே சக்களத்திபோல் மிரட்டவந்தவள் நீயாரடி. (இந்தம்மாளும் ஓர் சம்சாரியோ.)



சம்சாரி. நாத்தி. மாமி.

## சம்சாரி ஜாவளி.

(அல்லி உன்னால் மிகஅலைந்தேன் மெல்லியே) என்ற வர்ணமெட்டு.

இராகம் - தோடி.] பல்லவி. [ஆதிதாளம்

போடி போடி மெத்தப்பேசி மிணுக்காதே (போடி)

அநுபல்லவி.

கோடிமலர்களைநீ கொண்டுகும்பிட்டாலுமென்பேச்சு
கோதையுண்டோ (போ)

சரணங்கள்.

பஞ்சைபறைதிபோல
பல்லைமினிக்காதடி
கெஞ்சத்துணிந்துபேசம்
நாசக்காரிபோடி

மிஞ்சிபேசினாலே
மூாத்தாவிடிப்பேனடி
மோகனபாராஜன் முத்தமிழைதொழுதநாள்
போகட்டுமென்றுவிட்டேன் புத்தியில்லாகுடிகேடி. (போ)

இவ்வித பெருங்கூச்சலைக்கண்ட தன் மாமியாகிய கிழவி ஓடிவந்து அண்டை அயலார் கண்டால் நம்மை ஏளனம் செய்யார்களா நமக்கு தகுமா என்றதைக்கேட்ட சம்சாரி ஓ! ஓ!! வாழ்கிற வீட்டிற்கு வங்குரங்கு கட்டிவைத்தாற்போல அலங்கரித்துக்கொண்டு கையை வெகுதூரத்தில் நீட்டாதே அந்தமட்டும் நிறுத்தென்று மாமியின் மயிரைப் பிடித்தடிக்க, அருகிலிருந்த மைத்துனனும் மாமனும், நாத்தியும் தடுக்க, சொருகிவைத்த அகப்பைப்போனும், குரத்து சிப்பாய்போல் வந்தாலும் உங்களை மாத்திரம் விட்டுவிடுவே(ன)

(ஊரெல்லாம்சுத்தி என்பேர் முத்தி) தெரியாதோ இந்த துடப்பக்கட்டையால் சிங்காரித்து பூஜைசெய்வேன் என்ற சூர்ப்பனகா வார்த்தையைக் கேட்ட தன் மாமனார் அம்மா (பதராத காரியஞ் சிதராது) இது பின்னால் கட்டுசோர் மூட்டை தெரியாமல் வார்த்தையை மிஞ்சிக் கொட்டுகிறாய் என்று அதட்டிக்கொண் டிருந்தார்.

இங்கு நிற்க, வீட்டிற்கு பதார்த்தங்களை வாங்கிக் கொடுத்தனுப்பிய மன்னாரசாமி தன் வீட்டில் சமையலாகி யிருக்குமென்று தரித்திரத்தோடு பசியால் மெலிந்து வீட்டில்நுழைந்து ஆலாகோல ஆட்ட காக்ஷியைப்பார்த்து இரவாணத்தில் சொருகியிருந்த தடியை எடுத்துவந்து (செத்தவன் மயிரைக் கயர்திரித்து சென்னப்பட்டணம் விற்கவந்தவன்போல்) ஒப்புக்குத்தடியைஓங்கி அடிக்கக்கண்ட சம்சாரி சர்ப்பம்போல் சீறி "மாமிக்கு வந்தகேடு சாமிக்கும் பிடித்ததோ" சி! சீ!! கையிலாகாத முண்டமே சண்டாளப்பபோவி உன்னைக் கட்டிக்கொண்ட நாள்முதலாய் அரைகாசி கீரமணிக்கு வழியில்லாதவன் நீ என்னை அடிக்க தீரமுண்டா பச்சை வெண்ணையை வெட்ட வகையற்ற நாயே பேயே உனக்குவந்த பெண்டாட்டி சிமாட்டி என்றறியாயோ மூளி என் ஜோலிக்கு வந்தால் கேலிக்கிடமாகுமென்று பலவாராக பேசி பேசி தூஷிக்கவும், எதிர் வீட்டிலுள்ளவர் அண்டை வீட்டிலுள்ளவர் யாவரும் கண்டு மெய்தளர்ந்து அங்கங்கிங்கி "ஒண்டவந்த பிடாரி ஊர்பிடாரியை ஓட்டி" காப்புகட்டுபவள் இவளுக்கே தகும்தகுமென மனந்திகைத்து பலவிசேஷங்களை பேசிக்கொண்டிருந்தார்கள்.

## விகடா னந்தக் களிப்பு.

விகடா னந்தத்தின் களிப்பு - அதை
விட்டுச்சொன்னாலென்மேல் வரும்முகஞ்சுளிப்பு (விக)

சகடர்கள் ஸஹவாசங் கோரம் - மெத்த
சல்லாபமாய்ப்பேசி தலையில்வைப்பார்பாரம்
பகரும் முன்னோர்கள் தீரம் - அது
பழுதாகுமோமெத்தப் புண்ணியரின்வீரம் (விக)

மாமியைக் கண்டிட்டால் கோபம் - இந்த
மண்டலத்தோர்படும் மகிமைபரிதாபம்
சாமிக்கு சாமியின் சாபம் - தீரா
சண்டாளநரகத்தில் சாரச்செய்வார்லாபம் (விக)

கலியுக தெள்ளிய சிங்கம் - குப்பையை
கலைத்துக்காட்டினேன் குவலயத்தின் தங்கம்
கிலிகால கொடுமையை யெங்கும் - பாலன்
கூசாமல்விளம்பிட்டேன் குடிகேடர்கள்பங்கம் (விக)

வாழைக் கடிவாழை யுற்று - துரிதம்
வருமென்றறியீரோ வெகுளியரேநேற்று
பிற ழ யிருந்தாலு முற்று - அரிய
பெரியோர்சீர்திருத்தி பொருத்திடுவார்சற்று (விக)

இவ்வித மெய்யர்களுடைய பாடல்களை பாடிக்கொண்டு ஊர் ஊராகச்சுற்றி பொல்லாத சம்சாரியிருக்கும் வீதியில்வந்து பார்க்கையில் அங்கு இந்தம்மாளுடையபேர் வரிவிட்டு மெரிபட்டுயிருக்க கலியுக விகடனுக்குஞ் சரிப்பட்டு சற்று அந்தம்மாளை பார்க்கவேண்டுமென்றதாக அவ்வீதியிலுள்ள மனிதர்களைக்கேழ்க்க சம்சாரியிருப்பை தெரிவித்து அழைத்துவந்து எதிரில் விடவும், சம்சாரி மெத்த அச்சத்துடன் (மதனசுந்தரி கதைவையொஞ்சுரி) என்றது போல,வணக்கமாகவும், மரியாதையாகவும், பெட்டியிலடங்கிய பாம்பைப்போல் அடக்கமாகவும் நிற்கக்கண்ட கலியுகவிகடன் ஐயோ இந்தம்மாளுக்கும் இன்னவள் மணாளனுக்கும் உத்தமம், மத்திமம் யாவும் அங்கத்தில் அங்காரகன் பூரணமாகவும் நிறைகுறைவாகவும் இருக்கின்றான் குறைவொன்றுமில்லை என, வாஸ்தவ சாஸ்திர சாஸ்திரியைச்சொல்லி ஆனால், வாய்பேய்மாத்திரம் பிடித்துக்கொண்டிருக்கிறதாக "வாயாடிசாஸ்திரங்" கூறுகின்றது என்றான்.

நிற்க, வேடிக்கைப்பார்த்திருந்த பிரஜைகள் கலியுகவிகடனை வ கி மஹாத்மாவே தங்களுடைய வார்த்தையை இதுவரையிலும கட்டு (ஆடுகடிக்குமென்று இடையன் உறியேறிப்பதுங்குவானும) அதுபோல், பதுங்கி சும்மாயிருந்தது எங்களுக்கே அதி ஆச்சரியமா யிருக்கின்றது வேறு யாராகிலும் இவ்வாறு சொல்லியிருந்தால் இன்னேரம் சின்னபின்னமாகப் பேசி விடுவாளென்றதைக்கேட்ட கலியுகவிகடன் சிருநகைபுரிந்து விளம்புதல்.

மலர் 1.] கிளைக்கதை. [இதழ் 4.

## காஞ்சிபுரத்து தஞ்சி, தடிராமன்.

முன்னோர்காலத்தில் காஞ்சிபுரம் தஞ்சியென்பவள் தன்பிள்ளைக்கு சவரஞ்செய்யும்பொருட்டாய் நாவிதனிடத்தில் சென்று என் புத்திரனுக்கு சவரஞ்செய்யுமென்றதும் பூவரசன் மரத்தடியில் உட்கார்ந்திருந்த ஓர் அம்மட்டன் அப்படியே ஆகட்டுமென்று சவரஞ்செய்தான பிறகு காசு கேழ்க்கவும், உடனே தஞ்சி காலணா எடுத்துக்கொண்டு காலணாகொடுவென்று அரையணாவை கையில்கொடுக்க அம்மட்டன் காலணாயில்லாமல் கடைத்தெருவில்போய் மாத்திவருகிறதாகச்சொல்ல, தஞ்சி ஓ! ஓ!! காலணா வீணாக போய்விடுகிறதாக யெண்ணி, இதற்காகநீ ஏன் அவ்வளதூரம் போகவேண்டும் காலணாவிற்குப்பதில் என்தலையையும் சிரைத்துவிடு என்று தன் தலையைக் குனிந்து கொடுக்கவே ஆனால், இது நல்லகாரியமே எ லையை மொட்டை யடித்துவிட்டு தஞ்சியின் முகத்தைப்பார்த்து அம்மா! உனக்கு இனி சுகமாயிருக்குமெனச் சொல்லி அனுப்ப "அரைத்துமீந்தது அம்மியென" வீடுவந்து சேர்ந்தாள்.

இந்த தஞ்சியின் மடமைத்தனம் குரங்காய் நிற்க, தன்புருஷனாகிய தடிராமன் கூலிகொடுக்கப்பயந்து, அரவடைகாலமில்லாமல் குடியானவர்களெல்லாம் சும்மாயிருக்கிறதருணங்கண்டு அழைத்துக் ய் பயிர்களை அறுத்து சுமையாகக்கட்டி வீட்டில்சேர்த்துவிட்டு தன்மனைவி மொட்டையாயிருப்ப தறியாமல் கண்மணி நானின்று ஓர்யுக்தி செய்தேன் பார்த்தனையா அது யாதெனில் பயிர்கள் அறவடையாகிற காலத்தில் வேலைக்காரர்களுக்கெல்லாம் கிராக்கியா யிருக்கிறது அப்படியிருந்தும் சுகமில்லை கூலி கொடுத்துகொடுத்து மொட்டையாகிறேன். அதனால் யாருக்கும் வேலையில்லாததருணம் பார்த்தும் அரவடையில்லாத காலமறிந்து பயிர்களை யறுத்து கட்டுகட்டி வீட்டில் சேர்த்துவிட்டேனென்றான். உடனே தன்மனைவியாகிய தஞ்சி நீங்கள் என்னைவிட மஹா புத்திசாலி யடையர்

தான் நானும் காலணு வீணுகாமல் மொட்டையடித்துக்கொண்டி
ருந்துவிட்டேன் பாருங்களென்று தன் தலையைக்காட்ட அவ்வூரி ரு
ந்தவரிதைக்கண்டு இவ்வித மடமைத்தனமுள்ளவர் இவ்வுலகிலும்
எவ்வுலகிலுங்கிட்டார் என்று கேலிசெய்ய தஞ்சியும் தடிராமனும்
அவமானமடைந்தார்கள் என்றான்.

இந்த தஞ்சி தடிராமனுடைய கதாரத்னத்தைக்கேட்ட சுகஜன
ங்களெல்லாம் கைகொட்டி ஓயாசிரிப்புற்றார் சம்சாரியும் வெட்கித்த
லைகுனிந்து ஐயா தாங்கள் சொன்னதெல்லாம் உலகத்திலுள்ளவருக்
கெல்லாம் சார்ந்ததா என்னையும் என் புருஷனுக்கு மாத்திரம் சார்ந்
ததா வென்றுகேழ்க்க "தேள்ளியசிங்கம் மஹா பூலோகவிகடனென்
னும் கலியுகவிகடன்" ஆனந்தித்து அடி பயித்தியக்காரி, வயித்திய
னுக்கு சயித்தியம் வந்தால்" உலகத்தாருக்குதான் வந்ததென்றிருப்
பான் அதுபோல, என்னைக்கேட்ட சம்சாரியாரோ அவளுக்கும் அ
ன்னவள் புருஷனுக்கும் சார்ந்ததே இதுபோல் இவ்வுலகத்தார் நட
ந்தால் அவர்களுக்கும் சேர்ந்ததே என்றதைக்கேட்ட சம்சாரி இன்
று எங்கள் வீட்டிலிருந்து பாலமிர்தம் பஞ்சாமிர்தம் உண்டு மறுநா
ள் தாம் எங்கேயாகிலும் செல்லுவீர் என்று வணக்கமாய் வருந்திக்
கொள்ளவும் அவ்வாறே தெள்ளியசிங்கம் அவ்விடத்திலிருக்க சுக
ஜனங்களாலும், மஹாத்மாக்களாலும் சூழ்ந்து வசித்திருந்தனர்.

இனியும் இந்த சம்சாரியுடைய திருவுருவப் படங்களும்
வரலாறும் இரண்டாம் பாகத்தில் வெளிவரும்.

சம்பூர்ணம்.

இனி
2-ம் பாகமும்
படத்துடன்
தயாராகிறது
தறிதமாகவரும்
1906.

2-ம் பாகம் விலை அணு-6. வேண்டியவர்கள் முன்னதாக எமது விலாசத்
திற்கு எழுதினல் அச்சிட்டபிறகு வி. பி. சார்ஜி இல்லாமல் அனுப்பப்படும்.

# பெ. வடிவேலன் அண்டு பிரதர்ஸ்,

சர்வஜனனுகூலன் புக்டிபோ.

நெ 34, அவதானம் பாப்பையர் தெருவு,

சூளை போஸ்டு சென்னை.

## இராமாயண வசனம்.

| | | | |
|---|---|---|---|
| இராமாயணவசனம் | 1 | 4 | 0 |
| ஷை படத்துடன் | 2 | 0 | 0 |
| ஷை நயம்பதிப்பு லெத்தர் படத்துடன் | 4 | 8 | 0 |
| ஷை கிலேஸ்படத்துடன் | 6 | 0 | 0 |
| ஷை மற்றோர் பதிப்பு | 3 | 8 | 0 |
| ஷண்முகசெட்டி பதிப்பு | 4 | 8 | 0 |

### மூலமும் உரையும்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் உரை | 3 | 8 | 0 |
| அயோத்தியாகாண்டவுரை | 2 | 8 | 0 |
| ஆரணியகாண்டம் உரை | 3 | 8 | 0 |
| சுந்தரகாண்டம் உரை | 2 | 8 | 0 |
| அங்கதன் தூது | 0 | 2 | 0 |
| வாலி மோட்சம் உரை | 0 | 2 | 6 |
| விபீஷணன் புத்தி நயம் | 0 | 1 | 6 |
| இராமாயண அரும்பதவுரை காலிக்கோ | 2 | 8 | 0 |
| ஷை கருப்பொருளுரை | 0 | 8 | 0 |

## டிராமா சங்கீத சரித்திரம்.

| | | | |
|---|---|---|---|
| பாரிசாதபுஷ்பாபரணம் | 0 | 3 | 0 |
| மணிமாலிகை சரித்திரம் | 0 | 3 | 0 |
| ☞ பாரீஸ் சாகுந்தளா | 0 | 8 | 0 |
| சௌ சௌ கள்ளர்பாட்டு | 0 | 2 | 0 |
| சாரங்கதரன் சரித்திரம் | 0 | 1 | 6 |
| சதாரம் சரித்திரம் | 0 | 1 | 6 |
| லலிதாங்கி சரித்திரம் | 0 | 4 | 0 |
| நல்லதங்கா சரித்திர | 0 | 3 | 0 |
| ஷை 2-பாகம் | 0 | 3 | 0 |
| தாராசசங்கவிஜயம் | 0 | 3 | 0 |
| பத்மாவதி சரித்திரம் | 0 | 1 | 6 |
| மஞ்சகோஸா சரித்திரம் | 0 | 3 | 0 |
| வள்ளியம்மன் சரித்திரம் | 0 | 3 | 0 |
| உருக்குமாங்கத சரித்திரம் | 0 | 1 | 6 |

## புதியகதைகள்

| | | | |
|---|---|---|---|
| ☞ கலியுகவிகடன படம் | 0 | 3 | 0 |
| குஸான்பர்ஷா | 0 | 4 | 0 |
| சரசமோஹன | 0 | 8 | 0 |
| விகடசுந்தரி | 0 | 8 | 0 |
| உலகவிசித்திரகதை | 1 | 0 | 0 |
| பூலோகரம்பைகதை | 1 | 0 | 0 |
| மைனாவதிகதை | 0 | 10 | 0 |
| சுதாரத்தினவளி | 2 | 8 | 0 |
| திராவிடமத்தியகாலகதை | 0 | 8 | 0 |
| மேற் பூர்வகாலகதை | 0 | 8 | 0 |
| கலாபூர்ணோதயம் | 1 | 0 | 0 |
| மனோவுல்லாசக்கதை | 0 | 8 | 0 |
| மனமோகினிகதை | 1 | 0 | 0 |
| மோகனாங்கிகதை | 1 | 4 | 0 |
| பிரபஞ்சஉற்பத்தி | 2 | 0 | 0 |
| இராசவம்சபரம்பரை | 0 | 10 | 0 |
| கொழுனனை வஞ்சித்த கொடு நீலிகதை | 0 | 4 | 0 |
| நாயகனை வஞ்சித்த நாரி பட்டபாடு நயம் | [illegible] | 3 | 6 |
| சத்தியவசனி | [illegible] | [illegible] | [illegible] |
| சகலகலாபூஷணம் | 2 | [illegible] | [illegible] |
| மனோரஞ்சனி | 0 | [illegible] | [illegible] |
| சுந்தராங்கி | 0 | 8 | 0 |
| சுவர்னகாந்தி | 0 | 8 | 0 |
| நௌகாநகல்சரித்திரம் | 1 | 8 | 0 |

## தீர்ப்பு

| | | | |
|---|---|---|---|
| ☞ சேலம்ஜில்லா தீர்ப்பு | 0 | 12 | 0 |
| ☞ சித்தூர்ஜில்லா தீர்ப்பு | 0 | 5 | 0 |

## நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| சிவநாமாவளி | 0 | 1 | 0 |
| விஷ்ணுசகஸ்திரநாமாவளி | 0 | 2 | 0 |
| நால்வர்சரித்திர நாமாவளி | 0 | 1 | 0 |
| கந்தர்நாமாவளி | 0 | 0 | 3 |
| சிவநாமாவளித்திரட்டு | 0 | 1 | 9 |
| விஷ்ணுநாமாவளி | 0 | 1 | 3 |

இன்னும் சகலமான தினுசுகளும் தயாராயிருக்கின்றது.